Namô Tassa Bhagavatô Arahatô Samma Sambuddhassa

THE

BUDDHIST CATECHISM,

BY

HENRY S. OLCOTT,

PRESIDENT OF THE THEOSOPHICAL SOCIETY, ETC.

Approved and recommended for use in Buddhist schools by H. SUMANGALA, *Pradhâna Nâyaka Sthavira, High Priest of the Sripada and Western Province and Principal of the Vidyôdaya Parivêna.*

Forty-First Edition. (Tamil.) Corrected and largely extended.

MADRAS:

The "Theosophist" Office, Adyar.

LONDON: THEOSOPHICAL PUBLISHING SOCIETY,

161, NEW BOND STREET. W.

1905.

T.A. 1/3

172

1935

MADRAS

தமிழ் முதல் பதிப்பு முகவுரை.

இப்பௌத்த தர்ம வினாவிடையை இங்கிலீஷிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யும் பொருட்டு என்னிடத்தில் ஆலோசனை செய்யப்பட்டிருந்தும், முடிவில் தற்செயலாக அந்த வேலை மதிராஸில் உள்ள பஞ்சம குலத்திலொருவரால் பூர்த்தி செய்யப்பட்டு, அக்குலத்தில் சேர்ந்த ஒருவர் ஸ்தாபித்திருக்கும் அச்சுயந்திரகூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இவ்விடயத்திலெனக்கு மிகவும் சந்தோஷம்; ஏனென்றால் ததாகதராகிய சாக்கைய முனிவருடைய சிறந்த தருமத்தை, அநேக நூற்றாண்டுகள் கழிந்த போதிலும், மறபடியும் பௌத்தமார்க்கத்தை பிரசித்தி பெற்ற சக்ரவர்த்தி அசோகா என்பவருடைய காலத்தில் பௌத்தர்களாயிருந்தவர்களும், தென் இந்தியாவுக்கு பூர்வ சுதந்திரகாரருக்கு சந்ததியாரும், அசோகா விற்கு பின் வந்த அநேக பிராமண வெற்றியாளர் செய்யும் கொடுமைகளை சகித்துக் கொண்டு தங்களுடைய குல ஆசாரத்தையும், மத ஆசாரத்தையும் கைவிடாமல் பற்றிக்கொண்டிருந்தவர்களுமாகிய பௌத்தர்களுக்கு இப்போதுதான் பௌத்த தருமம் புத்திக்கு எட்டியது. மேற்கூறிய விடயத்தைப்பற்றி அத்தாட்சி கேட்க விரும்புவர்கள் தஞ்சாவூர் கோவிலின் புஷ்பதடாக சுவர்களில் எழுதியுள்ள சில படங்களை கண்டு தேரியலாம்.

இதை வாசிக்கும் பூர்வ பௌத்த தரும நேயர்கள் தங்களுடைய பெண்சாதிகளுக்கும் பிள்ளைகளுக்கும் பௌத்த தருமத்தை அறிவிப்பார்களென்று நம்புகிறேன். அதுகளை எல்லாம் விட பஞ்சசீலத்தை குறைவின்றி நடத்தும் உதாரணங்களைக்காட்டி இவ்வுலகின் சுகத்தை அடைவதுமல்லாமல் அவர்களுடைய கெட்ட கர்மத்தினால் இச்ஜனனத்தில் அநுபவித்த துக்கங்களை பார்க்கிலும் மறுஜனனத்தில் மேலான இன்ப சுகங்களை அடைவார்களென்று கருதுகிறேன்.

அடையார்.
17உ ஜனவரி மீ 1905 ௵ } எச். எஸ். ஆல்காட். பி. டி. எஸ்.

உறுதிப்பத்திரங்கள்.

முதல் புஸ்தகப் பதிப்புக்கு

இந்நூல் உறுதிமொழி கூறுவது யாதெனில்:— கர்னல் எச். எஸ். ஆல்காட், ஆயத்தம் செய்த சிங்கள பாஷை மொழிபெயர்ப்பு வினாவிடையை கவனமாய் பரிசோதனை செய்ததில் அவை தக்ஷணமாக பௌத்தாலய சூத்திரங்களுக்கு இணக்கமாயிருப்பதால். இதை பௌத்த கலாசாலை போதகர்களுக்கும், நமது சமய மூலாதார படிப்பினையை அறிய ஆவல்கொள்ளுந் தூயப் பிரியர்களுக்கும் புகழ்ந்தொப்பிவிக்கிறேன்.

இங்ஙனம்:

வித்யோதயா, கல்லூரி
கொழும்பு.
1881ஆம் ஜூலை 7உ.

எச். சுமங்கல மகா நாயகா.
ஸ்ரீபாத பிரதான ஆசாரியன்.

வினா விடையின் முப்பத்து மூன்றாவது (அங்கிலேய பாஷை) மொழி பெயர்பு முழுமையும் உரையாசிரியன் உதவியோடு பார்வையிட்டு அவை பௌத்த கலாசாலையின் உபயோகத்தின் பொருட்டு என் சிஷ்யருஷ பத்திரிகையை ஊர்ஜிதப்படுத்துகிறேன்.

இங்ஙனம்.

வித்யோதயா, கல்லூரி,
1897ஆம் ஏப்ரல் 7உ.

எச், சுமங்கல மகா நாயகா,

பௌத்ததர்மசாருக்க வினாவிடை

1. வினா. நீர் என்ன மதஸ்தர்?

விடை. பௌத்த மதஸ்தர்.

2. வினா. பௌத்தமென்றால் என்ன?

விடை. பௌத்த தர்மத்தின்படி நடப்பதற்கு ஏற்பட்டவை.

3. வினா. பௌத்தர் கடவுளா?

விடை. அல்ல.

4. வினா. மனிதரா?

விடை. ஆம், உருவில் மனிதன். ஆனால் உள்ளில் மற்ற மனிதரைப் போன்றவரல்ல, எப்படியெனில், அவர் அப்பொழு திருந்தவர்களைப் பார்க்கிலும் அதற்கு முன்னிருந்தவர்களைப் பார்க்கிலும் சிரேஷ்டரா யிருந்தார்.

5. வினா. பௌத்தர் என்பது அவர் பெயரா?

விடை. அல்ல. அது மனதினுடைய ஸ்திதி அல்லது ஓர் நிலைக்குப் பெயர்.

6. வினா. அதன் அருத்த மென்ன?

விடை. பிரகாச முற்றவர். அல்லது பூரண ஞான மடைந்தவர் என்று அர்த்தம் அல்லது பொருள்.

7. வினா. ஆனால், பௌத்தருடைய சரியான பெயர் என்ன?

விடை. அவரது ராஜவம்சப்பெயர், சித்தார்த்தன
அவரது குலப்பெயர் கௌதமன். அவ
கபில வஸ்து என்னும் பட்டணத்தி
இளவரசர்.

8. வினா. அவர் தாய், தகப்பன் யார்?

விடை. சுத்தோதனன் என்னும் அரசனும், மாய
என்னும் அரசியும்.

9. வினா. எச்சனங்களை அவ்வரசர் ஆண்டார்?

விடை. ஆரிய வகுப்பாரில் சாக்கையர்கள் என்
வர்களை.

10. வினா. கபிலவஸ்து என்னும் பட்டணம் எங்
யுள்ளது?

விடை. இந்தியாவில் காசிபட்டணத்திற்கு 10
மயில் வடகிழக்கிலும், ஹிமாலய பருவத
திற்கு தெற்காக 40 மயிலிலுமுள்ளது.

11. வினா. எந்த நதியோரத்தில்?

விடை. [illegible] என்றிப்போ தழைக்கு
ரோகிணி நதியோரத்தில்.

12. வினா. சித்தார்த்தன் என்னும் ராசன் எப்போ
பிறந்தார்?

விடை. கிறிஸ்து பிறக்க 623, வருஷங்களுக்குமுன்.

13. வினா. இவ்வரசனுக்கு மற்ற அரசர்களைப் போ
சுகாதிபோக ஆடம்பரங்களிருந்தனவா?

விடை. இருந்தன. இவருக்கு இக் தேசத்தி
மூன்று பருவங்களுக்கேற்க மூன்று திவ
அரண்மனைகள் முறையாக ஒ பது, ஐந்
மூன்று, அடுக்குள்ளனவாயும், ஒவ்வொ
அரண்மனையைச் சுற்றிலும் மயில்கள் சிற
விரித்தாடுவனவாயும், பட்சிகள் அனேக

மரங்களில், குரலெடுத்துப் பாடிவனவாயும் அருவிகள், குளங்களுள்ளனவாயும், புஷ்பிக்கும் செடிகள் நிறைந்தனவாகவு முள்ள சிங்காரத் தோட்டங்கள் சுற்று மிருந்தன.

14. வினா. அவர் ஏகாங்கியா யிருந்தாரா?

விடை. இல்லை. பதினாறுவது வயதில் சுப்பிர போதனது குமாரத்தியாகிய யசோதையை மணந்து; இன்னும் சங்கீதம், பரதம் முத லானவைகளில் வல்ல தோழியர் அநேகர் எப்பொழுதும் புடைசூழ சரச உல்லாசங்க ளுடனிருந்தார்.

15. வினா. இவ்வளவு சௌக்கிய மனுபவித்துக் கொண் டிருந்தவர் எப்படி ஞானியானார்?

விடை. அவரது சிறுவயது முதற்கொண்டே அநேக சாஸ்திரம் முதலானவைகளைப் பார்க்கும்போதே தெரிந்துகொள்ளக்கூடிய சாமர்த்தியவந்தர். இவருக்குப் படிப்பிக்க அநேக திறமான உபாத்தியாயர்கள் இருந் தார்கள் அவர்கள் சொல்லுமுன்னமே எல்லாவற்றையும் பூரணமா யறிந்து கொள்ளக்கூடிய சாமர்த்திய வந்தனாயு மிருந்தார்.

16. வினா. அவர் சுகநிறைந்த அரண்மனையிலேயே ஞானமடைந்தாரா? புத்தனானாரா?

விடை. இல்லை, அவர் 29-வது வயதில் எல்லாவற்றை யும் விட்டு தனியாய் வனத்திற்குப் போனார்.

17. வினா. ஏன் இப்படிச் செய்யவேண்டும்?

விடை. "சகச்சுத் துன்பம்" கெடுகிற காரணத்தை

யற்றியவும், அதினின்று தப்பித்துக்கொள்ள வகை தேடவும்.

18. வினு. இம்மாதிரி செய்தது தன் சுய நன்மைக்காகவா?

விடை. அல்ல. அவர் ஸர்வ பிராணிகளிடத்திலும் வைத்திருந்த அளவற்ற அன்பானது, தான் வருத்தமடைந்தாவது அந்தப் பிராணிகளின் நன்மையைத் தேடச்செய்தது.

19. வினு. அவர் என்னென்னவைகளை மறுத்தார்?

விடை. அவர் தனது அழகான அரண்மனைகள், ஆஸ்தி, சுகம், போகம், மிருதுவானபடுக்கை, நேர்த்தியான உடைகள், உருசிகரமான உணவு, தேசம், அன்பான பெண்சாதி பிள்ளை யாவற்றையும் துறந்தார்.

20. வினு. அந்த மகன்பெயர் என்ன?

விடை. ராகுளா என்னும் ராஜகுமாரன்.

21. வினு. நம் விஷயமாக இன்னும் யாராவது இப்படி வருத்தப்பட்டிருக்கிறார்களா?

விடை. யாருமில்லை. ஆகையால்தான் பௌத்தர்கள் இவரை இவ்வளவு விசுவாசிக்கிறார்கள். தவிர சரியான பௌத்தர்கள் அவரைப் போல் நடக்கவும் முயலுகிறார்கள்.

22. வினு அவர் வனத்திற்குப் போனபோது வயதென்ன?

விடை. அவரது 29-ம் வயதிற்போனார்.

23. வினு. சகல ஜனங்களும் விரும்புகிற உலக இன்பங்களை விட்டு வனம்போக நடைதியாக அவரை என்ன தூண்டியது.

விடை. அவர் ரதத்தில் சவாரி போய்க்கொண்டிருந்தபோது நான்கு தடவைகளில், நான்கு விதமான காக்ஷிகளைக் கண்டார்.

21. வினா. அவை எவை?

விடை. வயதினால் க்ஷீணமடைந்த ஒரு கிழவன் ரூபமும், வியாதிஸ்தன் ரூபமும், அழுகிப் போன பிரேதரூபமும், விகாரரூபமுமே.

25. வினா. அவர் மாத்திரந்தானா இப்படிப்பட்டதைப் பார்த்தார்?

விடை. அவரது சேவகனாகிய "சன்னா" என்பவனும் பார்த்தான்.

26. வினா. ஸஹஜமாய் எல்லோரும் காணும் காக்ஷி இவரை வனம்போகச் செய்வானேன்?

விடை. நாம் எப்போதும இப்படிப்பட்டவைகளைப் பார்க்கிறோம். அவர் பார்த்ததே இல்லை. ஆகையால் அவர் மனதில் அவ்வளவு உறுதியாய்ப்பட்டது.

27. வினா. இவரேன் பார்த்ததில்லை?

விடை. இவர் ஒருகாலத்தில் ராச்சியத்தைவிட்டு புத்தராவார் என்று இவர் பிறந்தகாலத்தில் ஜோதிஷர் சொன்னார்கள். அதனால் அரசன் தன் பிள்ளையை இழக்க இஷ்டமில்லாமல் மனிதர்களுடைய துன்பங்கள், மரணம் முதலானவைகள் அவருக்குத் தெரியவொட்டாமல் ஜாக்கிரதையாய்க் காத்துவந்தார். இளவரசனிடம், யாரும் இவ்விஷயங்களைப்பற்றி பேசவும், இடம் கொடாமலிருந்தார். தவிர உலகத்திலுள்ள இத்துன்பமெல்லாம் காண இடமில்லாமல் சுற்றுமுள்ள மதில்களுக்குட்புறத்தில்

பூந்தோட்டங்கள் சூழ்ந்த அரண்மனைகளில் சகல சௌக்கியங்களும் அநுபவிக்கும்படி ஏற்படுத்தி பாதுகாத்துவந்தார்.

28. வினா. தகப்பனார் அவ்வளவு பயப்படும்படி உலகத்தின் தன்மை பொருட்டு தான்வருந்தும்படியான அவ்வளவு அன்புள்ளவரா யிருந்தாரா?

விடை. ஆம், உலகத்திலுள்ள சகல ஜெந்துக்களிடத்திலும் அவ்வளவு அன்பும், கருணையுமுள்ளவரா யிருந்ததாகக் காண்கிறது.

29. வினா. வனத்திலெப்படி இவ்வித துன்பங்களின் காரணம் அறிய எண்ணினார்?

விடை. மனிதருடைய சுபாவம், துக்கத்தின் காரணம் முதலானவைகளை ஆழ்ந்து யோசனை செய்யும்பொருட்டு தன்னை யாதொன்றும் தடுக்காமல் தூரமாய்ப் போனார்.

30. வினா. அவர் எப்படி அரண்மனையினின்று தப்பித்துக்கொண்டார்?

விடை. ஒருராத்திரி எல்லோரும் நித்திரை போகுந்தருணத்தில் எழுந்து தூங்கிக்கொண்டிருந்த தனது, இளங்குழந்தையையும் பெண்சாதியையும் கடைசியாக நோக்கிவிட்டுத் தனது பிரிய வாகனமாகிய "காண்டகம்" என்னும் வெண்குதிரைமேல் ஏறிக்கொண்டு தனதரண்மனை வாசலுக்குப் போனார். அப்போது வாசற்காவற்காரர் நித்திரையிலிருந்தார்கள்,

31. வினா. ஆனால் வாசற்கதவு பூட்டப்பட்டிருந்ததல்லவா?

விடை. பூட்டப்பட்டிருந்தது. ஆனால் சித்தார்த்தர் யாதொரு சப்தமு முண்டாகாதபடி திறந்து இருட்டில் வெளியே போய்விட்டார்.

32. வினா. எவ்விடம் போனார்?

விடை. கபில வஸ்துவுக்கு வெகு தூரத்திலுள்ள "அனோமா" என்னும் நதி தீரத்துக்கு.

33. வினா. அதன்பின் என்ன செய்தார்?

விடை. குதிரையி னின்றிழிந்து தன் கைவாளால் தன் தலைமயிரை அறுத்துவிட்டு தன் ஆபரணங்களையும், குதிரையையும் "சன்ன" விடம் கொடுத்து தன் தகப்பனாகிய ராசனிடம் கொடுக்கச்சொன்னார்.

34. வினா. அதன் பிறகு என்ன நடந்தது?

விடை. மகத தேசத்தின் முக்கிய பட்டணமாகிய "ராஜக்கிரகம்" என்னும் ஊருக்குக் கால் நடையாகப் போனார்.

35. வினா. அவ்விடம் ஏன் போனார்?

விடை. தான் விசாரித்தறிய எண்ணங் கொண்ட ஞானத்தைக்கற்க, ஞானிகள் வாசம் செய்துக் கொண்டிருக்கும் "ஊருவிலா" என்னும் வனத்திற்குப்போய் பின்பு அவ்வறிவோர்களுடைய சிஷ்யரானார்.

36. வினா. அவர்கள் எம்மதஸ்தர்?

விடை. ஹிந்துக்களான பிராம்மணர்

37. வினா. என்ன கற்பித்தார்கள்?

விடை. பூர்ண ஞானமடைய தேகத்தை வருத்தவும், கடின தவம் செய்யவும் கற்பித்தார்கள்.

38. வினா. அவர் அப்படி இருக்கக்கண்டாரா?

விடை. இல்லை. அவர்களுடைய யாதிரிகளைக் கற்று எல்லாவிதமான தவங்களையும் செய்தும், மனிதருடைய துக்கத்திற்குக் காரணம் தெரியவில்லை.

39. வினா. பின் என்ன செய்தார்?

விடை. "புத்கயா" என்னும் பிடத்திற் கடுத்த காட்டிற்சென்று, அநேக வருஷம் தியானத்தில் பட்டினியா யிருந்தார்.

40. வினா. அவர் தனியா யிருந்தாரா?

விடை. இல்லை. ஐந்து ஸகாக்களிருந்தார்கள்.

41. வினா. அவர்கள் பெயர் என்ன?

விடை. கோண்டன்னியன், பட்டீயா, வப்பா, மஹநாமா, அச்சாஜி.

42. வினா. தன் மனது உண்மையைப் பூரணமாய் அறிய எவ்வித வழியை அனுசரித்தார்.

விடை. தன் மனதைக் கலக்கும்படியான பார்வைகளையும், கேள்விகளையும் விலக்கி அவர் ஓரிடத்திலிருந்து தியானம் செய்தார்.

43. வினா. அவர் பட்டினியா யிருந்தாரா

விடை. ஆம் இருந்தார். அவர் நாளுக்குநாள் சாப்பாட்டையும், தண்ணீரையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து கடைசியாக ஒரு பருக்கையாவது, அல்லது ஒரு எள்ளாவது சாப்பிடாமல் அக்கால முழுதும் இருந்தார்

44. வினா. அவர் கருதிய ஞானம் இப்படி இருந்ததினால் கிடைத்ததா?

விடை. இல்லை. அவர் நாளுக்குநாள் தேகமெலிவும், துர்ப்பலமும் அடைந்து, ஒருநாள் உலாவிக்

கொண்டு தியானத்தி லிருக்கையில் கீழே விழுந்து மூர்ச்சையானார்.

45. வினா. அவர் ஸஹாக்கள் அப்பொழுது என்ன நினைத்தார்கள்?

விடை. அவர் இறந்துவிட்டதாக எண்ணினார்கள். ஆனால் கொஞ்சநேரத்தில் தெளிவடைந்தார்.

46. வினா. அதன்பின் என்ன?

விடை. தேகத்தை வருத்துவதிலாவது பட்டினியா யிருப்பதிலாவது ஞானம் உண்டாகாதென் றும், மனது தெளியவேணுமென்றும், எண் ணினார். பட்டினியிருந்ததால் சாவினின்று தப்புவதே பிரயாசமாயிற்று. அப்போதும் பரம ஞான முண்டாகவில்லை. ஆகையால் ஞானமடையும் வரையிலாவது, உயிரோடி ருக்கவேண்டி சாப்பிடத் தீர்மானித்தார். (நாக) மரத்தடியிலிருந்த இவரைக்கண்ட ஒருபெரிய குடும்பத்தின் பெண் கொடுத்த ஆகாரத்தை மேற்சொன்ன காரணத்தால் வாங்கிக்கொண்டார், பின்பு எழுந்து தன் போஜன பாத்திரத்தை எடுத்துக்கொண்டு "நிரஞ்ஜனம்" என்னும் நதிக்குச் சென்று ஸ்நானம் செய்து தன் பாத்திரத்திலுள்ள ஆகாரத்தைப் புசித்து பலமடைந்து காட்டி னுள் சென்றார்.

47. வினா. அவ்விடத்தில் என்ன செய்தார்?

விடை. இவ்விதமான யோசனை செய்தபின் அவர் தீர்மானத்துடன் அன்று சாயங்காலம் (அர சமரத்தடிக்குச் சென்றார்.)

48. வினா. அங்கே என்ன செய்தார்?

விடை. தான் புத்தனாகும் வரையில் அவ்விடம் விட்டுப்போவதில்லை என்று நிர்மானித்துக் கொண்டார்.

49. வினா. மரத்தின் எப்புறத்தில் உட்கார்ந்தார்?

விடை. மரத்தின் கீழ்புறத்தில் கிழக்குமுகமாக.

50. வினா. அவ்விராத்திரி என்ன அடைந்தார்?

விடை. அவருடைய முற்பிறப்பு இன்னதென்பதும், மறு பிறவிவரக் காரணங்களும், ஆசை முதலானவைகளை நீக்கும் வகையும் அறிந்தார். மறுநாள் உதயத்திற்குமுன், அவருடைய மனமானது தாமரைக் கமலம் விரிகிறது போல் விரிந்து, பரமஞானமாகிய நான்கு சத்தியங்களும் விளங்கிற்று. இனிஅவர், எல்லா மறிந்தவர் என்னும் புத்தரானார்.

51. வினா. அவர் மனிதருக்கு உண்டாகும் துன்பத்தை எப்போது அறிந்தார்?

விடை. கடைசியாக அறிந்தார். காலை சூரியோதய மாகி இருட்டைப் போக்கி பார்ப்பவர்களுக்கு மரங்கள், கழனிகள், பருவதங்கள், சமுத்திரங்கள், நதிகள், மிருகங்கள், மனிதர்கள் முதலானவைகளைத் தெரிவிப்பது போல் இவர் மனதில் ஞான உதயமாகி மனிதர்களுக்குள்ள துன்பங்களையும், அவற்றை நீக்கி சௌக்கியமடையும் வகைகளையு மறிந்தார்.

52. வினா. இவ்வித ஞானமடையுமுன் ஏதாவது வருத்தப்பட்டாரா?

விடை. ஆம். மிகவும், பெரிதும் கடினமுமான, வருத்தங்களை அநுபவித்தார். ஞானத்தை மறைக்கும் குறைகள், தமக்கு இயற்கையாக

உள்ள விருப்பங்கள் முதலானவைகளை முன்பு வெல்லவேண்டியதாயிருந்தது. தன்னைச் சுற்றிலுமுள்ள உலகஸஹவாச தோஷங்களையும் விலக்கவேண்டியிருந்தது. நல்ல ஓர் யுத்தவீரன் தன் விரோதிகளோடு கடினப் போர்புரிந்து வெல்லுவதுபோல மனிதர்க்குள்ள துன்பங்களுக்குக் காரணத்தை மேற் கண்டதுகளுடன் சண்டையிட்டுத் தெரிந்து ஜெயவீரராய் முன்வந்தார்.

53. வினா. நீர் அதை எனக்கு ஒரு வார்த்தையில் சொல்லக்கூடுமா?

விடை. ஆம். "அஞ்ஞானம்" என்று சொல்லலாம்.

54. வினா. நீர் அதற்கு ஏதாவது நிவர்த்தி சொல்லக்கூடுமா?

விடை. "அஞ்ஞானத்தை" நீக்கி ஞானமடைவதே மருந்து.

55. வினா. "அஞ்ஞானம்" என் துன்பமுண்டாக்குகிறது?

விடை. பெருமை யற்றவைகளை பெருமையுள்ளனவாகக் கருதச்செய்கிறது; எதற்காக விசனப்படவேண்டியதில்லையோ அதற்கு விசனப்படச் செய்கிறது; எது ஸ்திரமல்லாததோ அதை ஸ்திரமென்றும், மாயையல்லவென்றும் எண்ணச் செய்கிறது; உண்மையாக எது நித்தியமான வஸ்துவோ அதை விட்டு அநித்திய வஸ்துக்களைத் தேடச்செய்கிறது.

56. வினா. எது அதிக ஸ்ரேஷ்டமானது?

விடை. மனிதனது வாழ்வு விதிகாரணத்தின் ஆக்தரி யத்தையறிதல், அறிந்து தன் ஜீவனையும் அறிந்தால், நம் ஜீவனையும் அதன் சம்பந்

தங்களையும் சரியாகமதித்து நமக்கும் நம் சகோதரராகிய மனிதருக்கும் கூடுமளவும் துன்பம் வராது ஒழித்து இன்பத்தைத்தேடிவாழுமலாம்.

57. வின. நமது "அஞ்ஞானத்தை" நீக்கி துக்கத்தை மாற்றும் வெளிச்சமெது?

விடை. பௌத்தர் சொல்லியபடி நான்கு உத்தம சத்தியத்தையறிதல்;

58. வின. அவ்வுயர்ந்த நான்கு சத்தியங்களின் பெயரென்ன?

விடை. (1) வாழ்வின் சங்கடங்கள்.

(2) நாம் பெறுவதற்கு அசக்தராஞலும், ஒருகாரியம் நமக்குக்கைகூடவேண்டுமென்று நம்மில் ஓயாமல் உண்டாகிக்கொண்டிருக்கும் ஒரு ஆவல், நம் துன்பங்களை விளைவிக்கும் காரணம் என்பது.

(3) அந்த ஆசையை மாய்த்தல் அல்லது ஒருவன் அதில் சம்பந்தப்படாமல் இருத்தல்;

(4) ஆசையை மாய்க்கும் வகை.

59. வின. துக்கத்தை உண்டாக்கும் வகைகளைப்பற்றி கொஞ்சம் சொல்லும்?

விடை. பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, வியாதி, மரணம், நாம் இச்சிக்கிற வஸ்துவை பெருமை, வந்தேதீரவேண்டியதை வெறுத்தல், அடையக்கூடாத வஸ்துவைப்பற்றி பேராவல் கொள்ளல்.

60. வின. இதுதானு ஒவ்வொருவருக்கு முள்ள தன்மை?

விடை. ஆம், அவை ஒவ்வொருவனிடத்திலும் வேறுபடும். ஆனுல் எல்லாமனிதர்களும் தராதரமாய்ப்பெற்று துன்பமடைகிறார்கள்.

61. வினா. "அஞ்ஞானத்தால்" உண்டாகும் ஆவலா லும், கைகூடா ஆசைகளாலும் உண்டாகிற துன்பத்திலிருந்து நாம் எப்படி தப்பித்துக் கொள்கிறது?

விடை. துக்கத்திற்குக் காரணமாகிய இவ்வுயிரின் பேரில் ஆசையும், இன்பங்களின் பேரில் ஆசையும், முற்றும் மாய்த்து ஜயமடைந்த போது.

62. வினா. அப்படிப்பட்ட ஜயம் நாம் எப்படி அடைய லாம்?

விடை. "எட்டுவித உத்தம மார்க்கத்தை" அனுசரி த்தால்.

63. வினா. மார்க்கம் என்னும் மொழிக்கு என்ன பொருள் கொண்டீர்? எட்டுவித உத்தம மார்க்கம் என்றால் எது?

விடை. இவ்வழியின் எட்டுபாகங்களுக்கும் எட்டு அங்கங்களென்று பெயர், அவையாவன:

(1) நேரான நம்பிக்கை.

(2) நேரான எண்ணம்.

(3) நேரான வார்த்தை.

(4) நேரான கொள்கை.

(5) நேரான வழியில் சம்பாத்தியம்.

(6) நேரான முயற்சி.

(7) நேரான ஞாபகம்.

(8) நேரான தியானம்.

எவர் இவ்வங்கங்களை மனதில் வைத்து அதின்படி நடக்கிறார்களோ அவர்கள் துக்கத்தினின்று விடுவிக்க பட்டவராய் இரக்ஷிப்பை அடையலாம்.

64. வினா. எதினின்று இரக்ஷிப்பு?

விடை. மறுபிறவித் துன்பத்தினின்றும் வாழ்க்கைத் துன்பங்களினின்றும் இரக்ஷிப்பு. இவையெல்லாம் கடாக்ஷமத்தாலும், "அநுஞானத்தாலும்," ஆவனாலும் உண்டாகின்றன.

65. வினா. இவ்விரக்ஷிப்பை யடைந்தகாலத்தில் என்னை அடைகிறோம்?

விடை. முக்தி, மோக்ஷம், அல்லது நிர்வாணம்.

66. வினா. முக்தி என்றால் என்ன?

விடை. பாடுபாடுகளினின்றும் நீங்கி பூரணமாய் ஒழிவாயிருப்பதும், நிராசையாயிருப்பதும், மாயையினின்று விடுபடுகிறதும், துக்கத்தினின்று விடுபட்டு நிற்பதும், இம்மனிததேகம் வருவதற்குக் காரண பூதங்களான சகலமும் அழிந்துபோவதும் ஆகிய இராகநிலைமை மோக்ஷமடையுமுன் பிறவி வந்துகொண்டே இருக்கும் பிறவியின் நாசமே மோக்ஷம்.

67. வினா. எது நமக்குப் பிறவி உண்டாகச் செய்கிறது?

விடை. இப்பூலோகத்தில் நாமிருந்து வாழும் நிலைமையில் உண்டாகும் தீரா ஆவல் பிறவிவாழ்க்கையைப் பெறவேணுமென்ற இந்த (தணியாத) தாகமே இவ்வுலகில் பிறப்பிக்கும் சிருஷ்டி சக்தியுடையதாயிருக்கிறது.

68. வினா. நமக்குள்ள ஆறாத ஆவலின் தன்மையால் மறுஜனனம் பாதிக்கப்படுகிறதா?

விடை. ஆம். நமது சொந்த குணத்தினாலும் அவகுணத்தினாலும்.

69. வினா. நமது குணமாவது அவகுணமாவது, நமது மறுஜனனத்தின் ஸ்திதி அல்லது உருவத்தை மாற்றுகிறதா?

விடை. ஆகுகிறது. அதின் பொதுவபிப்ராயம் எப்படி என்றால், சத்குணமதிகமானால் மறுஜனனம் சுகமுள்ளதாயும், சந்தோஷகரமானதாயும்; தீக்குணமதிகமானால் மறுஜனனம் கெட்டதாயும், எப்போதும் துன்பமுள்ளதாயும் இருக்கும்.

70. வினா. தற்கால சாஸ்திரப்படி இப்புத்த கோட்பாடு ஒத்துக்கொள்ளப்படுகிறதா? அல்ல நிராகரிக்கப்படுகிறதா?

விடை. இக்கொள்கை காரணகாரிய தத்துவமேயாகையால் சாஸ்திரோக்தமாகவே இருக்கிறது. சாஸ்திரத்தில் அபூர்ணமும், தாழ்வுமான ஸ்திதியினின்று; சம்பூர்ணமும், உயர்வுமான ஸ்திதியை அடைவதென்றும் அபிவிருத்தி தத்துவத்தின் காரியமே மனிதன் என்றுஞ் சொல்லியிருக்கிறது.

71. வினா. இப்படிச் சொல்லும் சாஸ்திரத்தின் பெயரென்ன?

விடை. உற்பத்தி சாஸ்திரம்.

72. வினா. இன்னும் புத்தமதம் சாஸ்திரோக்தம் என்று காட்டக்கூடுமா?

விடை. புத்தரது கொள்கையானது மனிதர்களுக்கு ஆதிபிதாக்கள் அநேகர் என்பதும், தவிர மனிதருக்குள் வகுப்புகள் இருக்கின்றனவென்பதும் அதில் சிலர் மற்றவர்களைப்பார்க்கிலும் தீவிரத்தில் ஞானம்பெற்று மோக்ஷநிலையை அடையக் கூடியவர்கள் என்பதும், போதிசத்துகள் மூன்றுவிதஸ்தர் உண்டென்பதும்.

73. வினா. ஞானியும் போதிசத்துகள் யார்?

விடை. யாவனொருவன் மற்ற ஜனங்களைப் பார்க்கிலும் தன் நன்னடக்கையை யபிவிர்த்தியால் வெல்லுகிறானோ யாவனொருவன் மறு ஜனனத்தில் இப்பூமியில் புத்தனாக நிச்சயமாய் அவதரிப்பானோ அவன் மனிதரது "அஞ்ஞானத்திலுண்டாகும்" துன்பங்களைத் தெரிந்து அவைகளை நீக்கும் வகையையும் கற்பிக்க வேண்டுமென்ற ஆவலும் கருணையும் அவ்வளவு அதிகமாயிருப்பதால் மனிதருக்காக புத்தத்துவம் அடையுமளவும் அநேகஜனனங்களை தன்னிச்சையாகவே அவதாரம் செய்து கற்பித்து கடைசியாகத் தான் பிறவி நீங்கி பரநிர்வாணத்தையடைய ஒப்புக்கொள்ளுவான்.

74. வினா. இம்மூன்றுவித போதிசத்துக்கள் என்னவென்று அழைக்கப்படுகிறார்கள்?

விடை. பஞ்ஞாதிகர், அல்லது உத்கதிதாஞ்யர் (யார் சீக்கிரம் அடைகிறார்களோ) சத்தாதிகர். விபாசிகர், (கொஞ்சம் தாமதத்தோடு அடைகிறவர்கள்.) விரியாதிகர்களெனபர், (அதி தாமதத்தோடு அடைபவர்.

75. வினா. கல்லது இன்னமென்ன சொல்லும்?

விடை. அநேகவிதம் தற்கால சாஸ்திரிகளும் பூமியில் ஜனிக்கிற கோடானுகோடி பிராணிகளில் சிலர் அதிசீக்கிரமாகவும் சிலர் அதிதாமதத்தின் பேரிலும் சிலர் கொஞ்சம் நிதானமாகவும் பூரணமடைகிறார்கள் என்று கற்பிக்கிறது. புத்தர்கள் மறுபிறவியிலுடைய சுபாவம் முற்பிறப்பின் குணம் அவகுணம் இவைகளின் பெரும்பான்மை அதாவது கர்மம் இதனால் ஆளப்படுகிறதென்று சொல்லுகிறார்கள்.

சாஸ்திரிகள், நாம் புதிதாய் எடுக்கும் தேகம் ஒருவாறு முன் ஜன்மத்தில் நம்மைச்சூழ்ந்த சாதகங்களின் காரியம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதமாய் புத்தமதத்திற்கும், சாஸ்திரத்திற்கும் ஆதிகருத்தில் ஒற்றுமையிருக்கிறது.

76. வினா. அப்படியானால் பௌத்தமும், சாஸ்திரமும் எல்லா பிராணிகளும் ஒரேவிதமாக சர்வசாமானிய சட்டத்திற் குட்பட்டிருக்கின்றன என்று கற்பிக்கின்றன அல்லவா?

விடை. ஆம். இரண்டும் அப்படித்தான் கற்பிக்கின்றன.

77. வினா. அப்படியானால் எல்லாரும் புத்தராகலாமா?

விடை. ஒவ்வொருவரும் புத்தராவது அசாத்தியம். ஏனென்றால் புத்தத்வம் ஒருவன் வெகு காலம் முயற்சி செய்வதனால் எதோ ஒரு காலத்தில் உண்டாகும். மனிதன் மோக்ஷமார்க்கம் மறந்துபோன காலத்தில் அவர்களுக்கு அந்த மார்க்கத்தைக் கற்பிக்க அவசியம் நேரும் போதுதான் உண்டாகும். ஆனால் ஒவ்வொரு பிராணியும் "அஞ்ஞானத்தை" வென்று ஞானத்தை கைக்கொள்ளுங் காலத்தில் மோக்ஷத்தைத் தடையின்றி அடையலாம்.

78. வினா. புத்தமதம் மனிதன் இந்த பூமியில் மாத்திரம் அவதரிப்பதாகச் சொல்லுகிறதா?

விடை. இல்லை. ஜனன பூமிகள் அளவற்றன என்றும், மனிதன் செய்யும் துஷ்கிருத்ய சத்கிருத்யங்களின் பெரும்பான்மையால் அவன் மறுஜன்மம் எடுக்கும் லோகமும் தன்மையும் ஏற்படு

வதாகச் சொல்லுகிறது. அதாவது சாஸ்திரப்
படி அவனது கர்மங்களினுல் ஏற்படும்.

79. வினு. நம்பூமியைவிட அதிக அபிவிர்த்தியும் பூரண
முமடைந்த உலகங்களும், குறைவாயடைந்த
உலகங்களும் உள்ளனவா?

விடை. புத்தமதம் அப்படி தான் சொல்லுகிறது;
அதுவுமன்றி ஒவ்வொரு லோக வாசிகளும்
அந்தலோகத்திற் கேற்றபடியே அபிவிர்த்தி
யடைகிறார்கள் என்றும் சொல்லுகிறது.

80. வினு. புத்தமதத்தை ஓரோபாடலிலடக்கிச் சொல்ல
வில்லையா?

விடை. ஆம்.

81 வினு. அதென்ன?

விடை. சப்ப பாபஸ்ஸ அகரணம்;

குசலஸ்ஸ உபசம்பதா:

சசித்த பரியோதபனம்:

ஏதம் புத்தா சாசனம்.

பாபரகிதமாய், ஹிருதயசுத்தமாய், இருப்
பது புத்தமதம்.

82. வினு. இப்போதனைகளால் பௌத்தம் பாபநிக்ரக
மதமென்ரு? புண்யக்ருத்ய மதமென்ரு?
என்ன விளங்குகிறது?

விடை. பாவம் செய்யாமலிருக்க வேண்டுவது நிக்ரக
குணம், புண்ணியம் தேடிக்கொள்வதும், ஹிரு
தயத்தை சுத்தமாக்குவதும் மூன்றும் இருத்ய
குணங்கள். புத்தர்; நாம் தீமைகளை விலக்க
வேண்டுவதும் தவிர, நன்மைகளையும் அகத்தி
யம் தேடவேண்டும் என்று கற்பிக்கிறார்.

(13)

83. வினா. புத்தமதஸ்தர் எந்த மூன்று யோகத்தை அநுசரிப்பதாகப் பாவனை?

விடை. அவைகள் திரிசரணம் என்னும் வாய்ப்பாட்டால் விளங்கும்; அதாவது நான் புத்தரை குருவாக அநுசரிக்கிறேன். சட்டத்தை குருவாக அநுசரிக்கிறேன். அவ்வர்க்கத்தவரை குருவாக அநுசரிக்கிறேன் என்பது.

84. வினா. இந்த வாய்ப்பாட்டை என்ன கருத்து கொண்டு சொல்லுகிறார்கள்?

விடை. புத்தப் பிரபுவை ஸர்வக்கியரான போதகரென்றும், வாதகரென்றும், சட்டம் அல்லது கொள்கை முக்கியமும், மாறுதலில்லாததுமான ஸத்தியக் கோட்பாடுகளும், நியாயக் கோட்பாடுகளும், பூர்ணசுபம் சித்திக்கும் வழியும் பொருந்தியிருக்கிறதென்றும்; வர்க்கத்தார் புத்தர் வெளியிட்ட உத்தம சட்டங்களைக் கற்பித்து விளக்குபவர் என்றும் எண்ணுவதாகக் கருத்து.

85. வினா. ஆனால் இவ்வர்க்கத்தவரில் அநேகர் நம்மைவிட புத்தியிலும் நீதிநெறியிலும் தாழ்ந்தவர்களல்லவா?

விடை. தாழ்ந்தவர்கள்தாம். ஆனால் போதனைகளைக் கருத்தோடு கைக்கொள்ளுகிறவர்களும் மனதைப் பயிற்சி செய்கிறவர்களும் எட்டுவித ஆசாரத்திலும், பரிபூர்ணத்திலும், ஒன்றையாவது அடைந்தவர்கள் அல்லது அடைய முயலுகிறவர்களுமே தான் வர்க்கத்தவர் என்று புத்தர் கற்பிக்கிறார். திரிசரணத்தில் சொல்லப்படிருக்கும் வர்க்கத்தவர் என்பது எட்டுவித பரிபூர்ணத்தில் ஒன்றை அடைந்த

யோகிகள் என்று தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

86. வினா. சாதாரணமாய் லௌகிக புத்தர்களுக்கு விதித்திருக்கும் பஞ்சசீலங்களென்னும் போதனைகள் அல்லது சாதனங்கள் எவை?

விடை. அவை பௌத்தர்கள் கோவில்களில் பயிரங்கமாய் உச்சரிக்கும் பாடங்களில் அடங்கியிருக்கின்றன. அவையாவன:—

(1) உயிர்வதையினின்றும் விலகவேண்டுமென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(2) திருடக்கூடாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(3) முறை தப்பின ஸ்திரீபோகத்தினின்று தவிரவேண்டும் என்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(4) பொய் சொல்லக்கூடாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(5) மயக்கத்தை உண்டாக்கும் சாராயங்களையும், தாமதத்தை உண்டாக்கும் மூலிகைகளையும், உபயோகிக்கலாகாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

87. வினா. இந்த போதனைகளை யநுசரிப்பதால் பௌத்தர்கள் என்ன பலனை அநுபவிக்கிறார்கள்?

விடை. எத்தனை போதனைகளை எவ்வளவு காலம் எவ்விதமா யநுசரிக்கிறார்களோ அவ்வளவுக்கேற்றபடி அதிகம் அல்லது கொஞ்சம் பலனை அடைகிறான் என்று சொல்லியிருக்கிறது. ஆதாவது நான்கு போதனைகளையும் தவிர்த்து ஒன்றை மாத்திரம் அநுசரிப்பானாகில் அந்த ஒரு போதனையை அநுசரித்த பலன் மாத்திரம் அடைகிறான்.

அதிககாலம் அந்த போதனைகளை அநுசரிப்பாராகில் பலனும் அதிகமாம். எவனொருவர் எல்லாப்போதனையும் தப்பாமல் அநுசரிக்கிறானோ அவனுக்கு மறுஜனனம் அதிக மேன்மையானதும், சந்தோஷகரமானதுமாயிருக்கும்.

88. வினா. லௌகிகர்கள் தாங்களே இவ்வெட்டுப் மேற்கொள்வது, பெருமையாகக் கருதும் அநுசரணைகள் இன்னும் யாதாயினும் உளவா?

விடை. உள்ளன. அத்தங்கசீலம் அல்லது எட்டு போதனைகள் என்று சொல்லப் பெறுவன. அவை முன் ஐந்து சீலங்களோடு பின் வரும் மூன்றும் சேர்ந்தது; அவையாவன:—

(6) அகாலங்களில் சாப்பிடலாகாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(7) கூத்தாடல், பாடல், தகாத ஆடம்பரங்கள் முதலானவைகளாகாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(8) பூமாலை, வாசனை திரவியங்கள், பரிமளங்கள், தைலங்கள், ஆபரணம் இவைகளை உபயோகிக்கலாகாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

குருக்கள்மார் அநுசரிக்கவேண்டிய பத்து நிபந்தனைகள் அல்லது தசசீலம் என்பது இவைகளோடு இன்னும் இரண்டு சீலங்கள் சேர்ந்தது. அவையாவன:—

(9) அகலமும் உயரமுமான படுக்கைகள் கூடாதென்னும் போதனையை அநுசரிக்கிறேன்.

(10) பொன், வெள்ளி இவைகளைப் பெற்றுக்கொள்ளலாகாதென்னும் சீலத்தை யநுசரிக்கிறேன்.

இந்த தசசீலம் என்பது எல்லா குருக்கள்மாரும், ஸானிராக்கள் என்னும் சீஷர்களும் கட்டாயமாய் அநுசரிக்க வேண்டியது. ஆனால் லௌகிக புத்தர்கள் இவ்விட்டத்தைப் பொருத்தது.

89. வினா. வர்க்கத்தார் பயின்று நடக்கவேண்டியதைப் பற்றி தனியாக ஏதாவது முறைகளும், சீலங்களும் உளவா?

விடை. ஆம். அநேகம் உள்ளன. ஆனால் அவைகளெல்லாம் நான்கு வகுப்பில் அடங்கும்.

(1) முக்கிய பயிற்சி முறைகள்.

(2) இந்திரியமடக்கும் ஸாதகங்கள்.

(3) உடை, ஊண், முதலானவைகள் நியாயமாய் சம்பாதித்து பிரயோகித்துக் கொள்ளும் முறைகள்.

(4) குற்றமற வாழும் ஏற்பாடுகள்.

90. வினா. குருக்கள்மார் முக்கியமாய் செய்யலாகாதென்று தடைசெய்திருக்கும் சில குற்றங்களையும் பாவங்களையும் கூறுக?

விடை. உயிர்வதை, திருடல், ஸ்திரீபோகம், பொய், மயக்கத்தை உண்டாக்கும் சாராயஞ் சாப்பிடல், அகாலத்தில் சாப்பிடல், கூத்தாடல், பாடல், தகாத ஆடம்பரங்கள்; பூமாலை, வாசனை பரிமளங்கள், உயரமும், அகலமுமான படுக்கை உபயோகிக்கல்; பொன், வெள்ளி, தானியம், மாம்சம், ஸ்திரீகள், கன்னிகைகள், அடிமைகள், ஆடு மாடுகள், யானைகள், முதலானவைகளைப் பெற்றுக்கொள்ளல் தூஷித்தல், கடுமையும் குரூரமுமான வார்த்தை சொல்லல், வீண்பேச்சு, கட்டுக்கதைகள் வாசித்தல், அல்லது வாசிக்க கேட்டல், லௌகிக

விடத்தில் சூதுபோதல், வருதல், விற்றல், வாங்கல், மோசம் செய்தல், லஞ்சம் கொடுத்தல், வஞ்சகம், சூது, பிறரை சிறைப்படுத்தல், கொள்ளையாடல், மிரட்டல், சில சாஸ்திரங்களையும் பயிற்சிகளையும் கற்றல்.

91. வினா. வைதிகர் லௌகிகரிடம் செய்யவேண்டிய கடமைகளென்ன?

விடை. சாதாரணமாய் முதன்மையான நீதிமார்க்கங்களை எல்லாம் தாங்கள் அனுசரிக்கவேண்டுவது. அவைகளை அவர்களுக்குக் கற்பித்துப் போதிக்க வேண்டுவது. சட்டங்களை யாவருக்கும் விளக்கிப்பிரசங்கிக்க வேண்டுவது. வியாதியஸ்தர்களுக்கு, கட்சிக்கு பெருக்குன்பம் விளைக்குங் காலத்து நாட்டார் வேண்டுகோளின்படி பரி ரக்ஷையாயும் பரித்தம் என்னும் சூத்திரவாக்கியம், உச்சரிக்க வேண்டுவது. ஜனங்களுக்கு நன்மார்க்கத்தில் உத்ஸாஹம் விளைவிப்பது.

92. வினா. உண்மையான மதிப்பு எப்படிப்பட்டதென்று புத்தர் கருத்து?

விடை. வெளிக்குச் செய்யுங் காரியங்களில் அதிக பயனில்லை காரியத்தைத் தூண்டுகிற அந்தர் கருணையால் மோக்ஷம் நிர்மாணிக்கப்படும்.

93. வினா. ஒரு உதாரணத்தால் விளக்குக?

விடை. தனவந்தன் ஒருவன் லக்ஷம், லக்ஷமாய் செலவுசெய்து கோவில்களையும், புத்த விக்கிரகங்களையும் உத்ஸவாதிகளையும், வைதிகருக்கு சமாராதனைகளையும், ஏழைகளுக்கு தருமங்களையும், குளம் வெட்டுவதையும், பிரயாணிகளுக்கு வழிகளில் தங்குமிடங்களையும் செய்விக்கலாம். ஆனால் வெளியாடம்பரத்திற்காக

ளாவது, பலர் புகழ்தலை விரும்பியாவது, வேறு வித சுயநன்மைக்காகவாவது செய்வானாகில், அதிகமாய்ப் பலன் இராது. ஆனால் தனவானா னாலும், தரித்திரனானாலும் ஒரு அற்ப காரியத்தையும் அந்த கருணையோடாவது தன்னைப்போன்ற மனிதர்களுக்கு பொது நன்மையை மனப்பூர்வமாய் விரும்பியாவது செய்வானாகில் அதிக பலனை யடைகிறான். ஒரு நற்காரியம் கெட்ட அபிப்பிராயத்தோடு செய்யப்படுமாயின் மற்றவர்களுக்குப் பலனேயொழிய செய்கிறவனுக்குப் பலனில்லை. மற்றொருவன் செய்கிற நற்காரியத்தை மதித்து ஒப்புக்கொள்ளுகிறவன் வெளிக்கன்றி மன:பூர்வமாய் ஒப்புக்கொள்வானாகில் கொஞ்சம் பலனை யடைகிறான்.

94. வினா. பௌத்தருடைய உத்தம ஞானங்களெல்லாம் எந்த புஸ்தகத்தில் கற்பிக்கப்பட்டிருக்கிறது?

விடை. திரிபிடகம் என்னும் 3, வித கிரந்தங்களில்.

95. வினா. அந்த 3, பிடகம் என்னும் கிரந்தங்களின் பெயரென்ன?

விடை. வினயபிடகம், ஸுத்தபிடகம், அபிதம்ம பிடகம்.

96. வினா. அவைகளில் ஒவ்வொன்றும் என்ன விஷயங்கள் சொல்லியிருக்கின்றன?

விடை. முதல் புத்தகம் வைதிகர்கள் தங்களை ஆட்படுத்தவேண்டிய பயிற்சி முறைகளையும், இரண்டாவது லௌகிகருக்குப் பயன்படும் படியான சம்பாஷணைகளையும், மூன்றாவது, புத்த தத்வமும் விளக்குகின்றன.

97. வினா. இந்த புஸ்தகங்களை கிறிஸ்தவர்கள் தங்கள் பைபிலை நம்புவதைப்போல தெய்விகமாக உண்டானதாக பௌத்தர்கள் நம்புகிறார்களா?

விடை. மனிதன் தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ளக்கூடிய பரமோத்தம சட்டங்களெல்லாம் அடங்கியிருப்பதாக அதை பூஜிக்கிறார்கள்.

98. வினா. பௌத்தர்கள் புத்தர் தன் ஸன்மார்க்கத்தால் ஒவ்வொருவனுடைய பாவத்தையும் போக்க வல்லவர் என்று எண்ணுகிறார்களா?

விடை. கொஞ்சமுமில்லை. ஒருவன் மற்றொருவனை ரக்ஷித்தல் முடியாது. ஒவ்வொருவனும் தன்னைத்தான் ரக்ஷித்துக் கொள்ள வேண்டும்.

99. வினா. அப்படியானால் புத்தருக்கும் நமக்கும் மற்ற பிராணிகளுக்கும் உள்ள ஸம்பந்தமென்ன?

விடை. ஸர்வசாக்ஷிய ஸர்வஞ்ஞ போதகர், ஸன்மார்க்கத்தைக் கண்டுபிடித்துக் காட்டியவர், மானிட பிறவித் துன்பத்திற்குக் காரணம் விளக்கிவிட்டு நீக்கவல்ல ஒரே மருந்தைப் புகன்றனர், ஸன்மார்க்கத்தைக் காட்டி அபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்ளும் விதத்தை புகட்டினதால் நம்மை நடத்தும் தலைவர். ஆழமும் கடிர வேகமுமுள்ள ஆற்றில் போட்ட குறுக்கமான பாலத்தைத் தாண்ட குருடனுக்கு வழி காட்டுவதுபோல "அஞ்ஞானத்த காரணம் நமக்கு ரக்ஷிக்கப்படும்" வகையை விட்டவ ரானதால் புத்தரை ரக்ஷகர் என்று தடையில்லாமல் சொல்லலாம்.

100. வினா. புத்தத்வ அபிப்பிராயத்தை எல்லாம் ஒரு சொல்லால் விளக்க வேண்டுமானால் எந்த சொல் பொருந்தும்?

விடை. நியாயம்.

101. வினா. ஏன்?

விடை. ஏனென்றால் சர்வ வியாபிய சட்டப்படி யொவ்வொருவனும் சரியாகத்தான் அருகனான வெகுமானமும், சிக்ஷையும் பெறுவான் கொஞ்சமும் ஏறாது தாழாது, நற்காரிய மாகிலும், துஷ்டகாரியமாகிலும், எவ்வளவு அற்பமானதாயினும், எவ்வளவு ரகசியமாய்ச் செய்தாலும் நமக்கேற்றமை பொருந்திய கருமத் தட்டினின்றும் மீளாது.

102. வினா. நீர் விளக்கிய இவ்விஷயங்களெல்லாம் புத்தர் போதி விருக்ஷத்தின் அருகேயே யோசித் தறிந்தாரா?

விடை. ஆம் இவைகளும், இன்னும் பௌத்தாகமங் களில் சொல்லி இருக்கும் அநேக விஷயங்க ளும் அப்போது யோசித்ததே பௌத்த தத் வமுழுதும் அந்த தியானத்தில் அவர் மன திற்குப் புலப்பட்டது.

103. வினா. புத்தர் போதி விருக்ஷத்தினருகே எத்தனை காலம் இருந்தார்?

விடை. 49, நாளிருந்தார்.

104. வினா. அப்புறம் என்ன செய்தார்?

விடை. ஒரு அஜபால விருக்ஷத்தருகே போய் யோசி த்து தமது கொள்கைகளை சாதி மத வர்ண பேதமின்றி எல்லாருக்கும் கற்பிக்கத்தீர்மா னித்தார்.

105. வினா. தன் தத்வத்தை யாருக்கு முதலில் பிரசங் கித்தார்?

விடை. தான் கடுர உபவாஸத்தை விட்டதும் தன்னைக் கைவிட்ட ஸிநேகிதரும் சிஷ்யருமான 5, பேருக்கு.

106. வினா. அவர்களை எங்கே கண்டார்?

விடை. காசிக்கருகில் இஸிபட்டனத்தில்.

107. வினா. அவர்கள் உடனே இவர் சொன்னதை எல்லாம் கேட்டார்களா?

விடை. கேட்கக் கூடாதென்று எண்ணியிருந்தார்கள். ஆயினும் இவரது திவ்ய ஸ்வய ரூபத்தாலும் வாக்கு சாதுரியத்தாலும், மயங்கி அவர் பிரசங்கத்தை எல்லாம் 5 பேரும் உற்று கேட்கும்படி நேரிட்டது.

108. வினா. புத்தர் செய்த இந்த சம்பாஷணைக்குப் பெயரென்ன?

விடை. தம்மசக்கபவத்தன ஸுத்த அல்லது தத்துவ முறைகளை விளக்கும் சூத்திரம்.

109. வினா. இந்த சம்பாஷணை 5 பேர் விஷயத்திலும் எப்படி பயன்பட்டது?

விடை. விருத்தாபய மடைந்த கொண்டன்யன் என்பவன் முதலில் அருகக்கடவுளை வழிப்பட்டான். பின்பு மற்ற நாலு பேரும் வழிப்பட்டார்கள்.

110. வினா. இன்னும் அவர் மதத்தில் சேர்ந்தவர்கள் யார்?

விடை. யசனென்ற ஒரு தனவானான லௌகிகவாலிபனும், அவன் தகப்பனும். 5, மாதத்தில் 60, சிஷ்யர் வரையிலானார்கள்.

111. வினா. அப்போது புத்தர் என்ன செய்தார்?

விடை. தன் சிஷ்யரை யெல்லாம் ஒன்றாய்க் கூப்பிட்டு பல திக்குகளுக்கும் போய் போதிக்கும்படி அனுப்பினார். உருவிளாவுக் கருகிலிருந்த

சென்னானி என்னும் பட்டணத்திற்குத் தானும்போனார்.

112. வினா. தற்காலத்தில் உலகத்தில் அநேகம் பௌத்தமதஸ்தர்களிருக்கிறார்களா?

விடை. ஆம். மற்ற மதஸ்தரை விட பௌத்த மதஸ்தர்களதிகம்.

113. வினா. உலகத்தில் எவ்வளவு ஜனங்களிருப்பதாக எண்ணப்படுகிறது?

விடை. சுமார் 1,300 கோடி.

114. வினா. இதில் எத்தனை பேர் பௌத்த மதஸ்தர்?

விடை. சுமார் 500, கோடி கிட்ட தட்ட பாதி.

115. வினா. 5, மாதம் போதித்தும் 60, சிஷர்கள் தானானரென்று சொன்னீரல்லவா?

விடை. அவ்வளவு தான்.

116. வினா. புத்தரான பிறகு எத்தனை காலம் உலகத்தில் அவர் தத்துவத்தை போதித்தார்?

விடை. 45, வருஷம். இக்காலத்தில் எல்லா ஜாதிகளிலும் ராஜரையும், கூலிக்காரரையும், தனவான்களையும், தரித்திரரையும், பலவான்களையும், பலஹீனராகிய அநேகரை தன் மதத்தில் சேர்த்தார். மேலும் அக்காலத்தில் கல்விக் களஞ்சியமாயிருந்த சிலரும் சிஷரானார்கள்.

117. வினா. இவரது பெண்சாதியும் புத்திரனாகிய ராகுலனும் என்ன ஆனார்கள்?

விடை முதல் ராகுலனும் பின்பு யசோதையும் உலக வாழ்க்கையைவிட்டு இவர் மதஸ்தரானார்கள்

118. வினா. இவரது தகப்பனார் முடிவு என்ன?

விடை. அவரும் இந்த உண்மை தத்துவத்தைக் கொண்டார்.

119. விஞ. இக்காலமெல்லாம் புத்தர், தேசத்தில் அங்குமிங்கும் சுற்றித்திரிவது தானா வழக்கமா?

விடை. வருஷத்தில் வெயில் காலம் 8 மாதமும், பட்டணம் பட்டணமாய், மாகாண மாகாணமாய்ப் போய் ஜனங்களுக்கு போதித்து கற்பித்து வந்தார். மாரிகாலம் 4, மாதமும் ஒரு இடத்தில் தங்கி தன் முக்கிய சிஷர்களுக்கு செய்ய வேண்டிய முறைகளை எல்லாம் விபரமாய் கற்பித்து வந்தார்.

120. விஞ. பௌத்த வைதிகர் இன்னும் இந்த வழக்கத்தை யனுசரிக்கிறார்களா?

விடை. ஆம். அநேகர் செய்கிறார்கள்.

121. விஞ. புத்தரது சொந்த சிஷர்களில் அவரது அன்பர் யார்?

விடை. சாரிபுத்திரன், மொக்கல்லானன்.

122. விஞ. பௌத்த வைதிகளுக்கும் மற்ற வைதிகளுக்கும் உள்ள பேதமென்ன?

விடை. மற்ற மதங்களில் வைதிகர்கள் கடவுளுக்கும், மனிதனுக்கும் நடுவில் மத்தியஸ்தராக இருப்பதாகவும் பாபக்ஷமைக்கு வேண்டிய உதவி செய்வதாகவும் முறை பாராட்டி வருகிறார்கள். பௌத்த வைதிகர்கள் தெய்வச் செயலினாலும் ஒன்றும் பெற்றுக்கொள்வதில்லை, எதிர் பார்ப்பதுமில்லை, அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் பௌத்த தத்துவத்தை தாங்கள் பயின்று பிறருக்கு உண்மைநெறியை போதிக்க வேண்டுவது ஸ்வரூப்ய கடவுள் அறிவினர் தங்கள் அபிப்பிராயங்களால்

உண்டு பண்ணும் ஒரு பெரிய நிழலே யொழிய வேறல்ல என்பது பௌத்த மதஸ்தராது கொள்கை.

123. வினா. முதற்கருவி ஒன்றுமில்லாமல் வெறுமையி லிருந்து ஒவ்வொரு வஸ்துவும் ஒருசிருஷ்டி கர்த்தாவால உண்டாககப்பட்டதென்னும் தத் துவத்தையாவது ஒப்புக்கொள்ளுகிறார்களா?

விடை. புத்தர் ஆகாசம், நிர்வாணம், என்னும் இரண் டும் நித்திய வஸ்துக்கள் என்று கற்பித்தார், ஒவ்வொருவஸ்துவும், ஆகாசத்திலிருந்து ஒரு இயற்கையான மாறுமுறையால் உண்டா கிறது சிலகாலமிருந்து மறைந்துபோம் ஒன் றும் வெறுமையிலிருந்து உண்டாவதில்லை, ஆகையால் சிருஷ்டியும், சிருஷ்டிகர்த்தரும் உள்ளதாக எண்ண இடமில்லை.

124. வினா. புத்தர் விக்கிரகாராதனை ஒப்புக்கொண்டாரா?

விடை. இல்லை அவர் அதை மறுத்தார்.

125. வினா. ஆனால் பௌத்தமதஸ்தர் புத்தவிக்ரஹத்தை, அர்ச்சிப்பதும், அவர் அங்கங்கள் ஸமாதி முத லானவைகளை பூஜிப்பது மில்லையா?

விடை. ஆம் ஆனால் விக்ரகாராதனை செய்டவன் கொள்ளும் கருத்தோடல்ல.

126. வினா. என்ன பேதம்?

விடை. விக்கிரகாராதனை செய்பவன் விக்ரகங்களை தான் கருதிய காணாத கடவுள் அல்லது தேவர்களது நிஜஸ்வருபமாக பாவிக்கிறான். தேர்ந்த ஞானவந்தன் விக்ரகத்தில் எங்கும் நிறைந்தகடவுளது ஒரு பாகம் அடங்கி யிருப் பதாகப்பாவித்து, விககிரகத்தை பூஜிக்கிறான்

பௌத்தமதஸ்தரோ உலகத்தில் மஹா பெரியவனும், ஞானவந்தனும், கருணைக் கடலும் கிருபா சமுத்திரனுமாக இருந்தவரது அறிகுறியாக முன்கூறிய விக்கிரகம் முதலானவைகளை பாவித்து வணங்குகிறார்கள். எல்லாசாதியாரும் எவ்வர்ணத்தாரும், மனிதனாகட்டும், ஸ்திரியாகட்டும், எந்த விதத்திலாவது பெருமை பெற்றிருப்பதாக எண்ணப்படுமாகில் அப்பெரியோர்புகழை நிலைநிறுத்துமப் பொருட்டு ஞாபகக்குறிகள் சிலவற்றைச் சேர்த்துவைத்து காப்பாற்றி கனப்படுத்துவது வழக்கம். புத்தர் உலக சரித்திரத்தில் எல்லாரையும் விட துன்பம் என்பது இன்னதென்றறிந்த மானிடரால் அதிகமாக பூஜிக்கப்பட்டுவருவதாகத் தோற்றுகிறது.

127. வினா. சூன்யம், மந்திரம், பொட்டு, முதலானவைகள் பௌத்தமதத்தில் சேர்ந்தவைகளா?

விடை. பௌத்தமதத்தின் ஆதிகருத்தினின்று அவைமுற்றும் வேறுபட்டவை அல்லது பூசனை மதமும், மண்டலிம தெய்வமென்று கொள்ளும் மதமும். இன்னும் இதரமதங்களுமாகிய இவைகளின் சேர்க்கைகளை பிர்ம ஜாலஸூத்தத்தில் இதுவும் இதுபோன்ற மூடபக்திகளும், இழிவும் ஹீனமுமானவைகளென்று வெற்றுமொழியால் கூறியிருக்கிறார்.

128. வினா. பௌத்த தத்வத்திற்கும் மதங்கள் என்று சொல்லத்தகுந்த மற்ற மதங்களுக்கும் முக்கியபேதமென்ன?

விடை. இவைகள் சிலவைகள் கடவுளின்றிய மதத்தான தன்மையும் பூண்டமா என்ப தொன்றில்

லாமல் தொடர்ந்த இருப்பையும் வாழ்க்கையையும், மோக்ஷ லோகமென்றொன்றில்லாமல், ஒரு ஆனந்தத்தையும், ரக்ஷகருந என்றொன்றில்லாமல் ரக்ஷணைமார்க்கத்தையும், தந்திரம், மந்திரம், தபசு, குருக்கள் அல்லது மத்தியஸ்த மகான்களின்றி "தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ளும் வழி ரக்ஷணையையும்" இந்த உலகத்தில் நமவாழ்நாளைக்குள் பூரணானந்த மடையும் வகையையும் கற்பிக்கிறது.

129. வினா. வழங்கும் பௌத்த மதம் எல்லா சாஸ்திரோக்தியாய் எல்லாம் உண்மையாய் இருக்கிறதா?

விடை. அநேக காலமாய் வழங்கிவரும் எல்லா மதத்தையும் போல சந்தேகமில்லாமல் இதிலும் பொய்யும் மெய்யுங் கலந்திருக்கிறது. தங்கத்திலும் அழுக்கு சேர்ந்திருக்கிறது, போல பௌத்தமதஸ்தரது மூடபக்தியாலும், ஆவேசத்தாலும், கவிசாதுரியத்தாலும், அநேக காலங்களில் புத்தரது மகிமை பொருந்திய நீதி நூல் முறைகளோடு விலக்கத்தக்க ஆபாஸங்களுங் கொஞ்சம் கொஞ்சம் சேர்ந்து விட்டன.

130. வினா. பௌத்தமதம் கல்வியும், சாஸ்திரப்பயிற்சியும், கூடாதென்று தடுக்கிறதா?

விடை. கொஞ்சமுமில்லை ஸிங்காலோவாத ஸூத்ரம், என்னும் ராஜக்ரகத்தினருகில் மூங்கில்தோட்டத்தில் செய்த சம்பாஷணையில் குரு தன் சிஷ்யனுக்குச் சாஸ்திரத்தையும், ஞானத்தையும் கற்பிப்பது கடமையெனக்குறித்தார்.

131. வினா. பௌத்தமதத்தில் நாம் பக்தியாலே கொள்ள வேண்டிய கோட்பாடுகள் யாதாயினும்

உள்ளவா?

விடை. இல்லை. புஸ்தகங்களில் எழுதி யிருந்தாலும், நம் பெரியோர் வாழ் வழிவந்தாலும், ஞானிகள் உபதேசித்தாலும், பக்தியாலேயே ஒப்புக் கொள்ளக் கூடாதென்று வற்புறுத்துகிறார். புத்தபிரபு ஏதோ சொல்லி யிருக்கிறதே என்று நம்பலாகாதென்றும், பாரம்பரியமாய் அநேககாலம் தொடங்கி வழங்கி வருகிறதே என்று நம்பலாகாதென்றும், ஞானிகள் எழுதினதினாலேயே அவர்கள் எழுதியதை எல்லாம் நம்பலாகாதென்றும், காரணம் கொஞ்சமுமில்லாத நம்பிக்கையால் கொண்ட கொள்கைகளை நம்பலாகாதென்றும் நம் குரு அல்லது உபாத்தியாயர் சொல்லியிருக்கிறாரே என் நம்பலாகாதென்றும் சொல்லியிருகிறார். எந்த விஷயமாயினும் நம்புத்திக்கும், யுத்திக்கும் புலப்பட்டாலொழிய நம்பலாகாது. ஏனெனில் நான் இதற்காக உங்களுக்கு போதித்தேன். கேட்டதினாலேயே நம்பலாகாது. புத்திக்குச்சரியாய்ப் புலப்பட்டால்தான் நம்பி அதன்படி மன. பூர்வமாய் நடக்கவேண்டும். என்று முடிக்கிறார்.

(அங்குத்தர நிகயத்தின் காலாம ஸூத்தத்தில் காண்க.)

132. வினா. புத்தமதம் வெளிவேஷத்தைக் கொள்ளுகிறதா?

விடை. வாசனையற்ற நேர்த்தியான வர்ணத்தை யுடைய ஒரு அழகிய புஷ்பம் போல இன்பமாகப் பேசி, பேசியபடி நடவாதவனது வர்ணத்தை பயன்படாது என்று தம்மதத்தில் சொல்லுகிறார்.

133. வினா. புத்தர் தீங்கு செய்பவனுக்குத் தீங்கு செய்ய வேண்டுமென்று கற்பிக்கிறாரா?

விடை. ஒருவன் மடத்தனமாய் எனக்குத் தீங்கு செய்வானானால் அவனுக்கு என் கைம்மாறாக மனப்பூர்வமாய் நேசத்தைப் பாராட்டுவேன். எவ்வளவுக்கெவ்வளவு தீங்கு செய்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை செய்வேன், என்று தம் மதத்தில் சொல்லுகிறார். அருகத்துக்கள் அநுசரிக்கும் மார்க்கம் இதுவே. தீங்கு விளைவிப்பவனுக்குத் தீங்கு விளைவிக்கலாகாதென்று புத்தமதம் வற்புறுத்துகிறது.

134. வினா. புத்தமதம் ஒரு சாஸ்திரநூலா நீதிநூலா?

விடை. அது முக்கியமாய் ஒரு நீதி தத்வமே, அது எல்லா லோகங்களும் அவற்றிலுள்ள ஜீவாஜீவ ஸர்வ ஸ்வரூப வஸ்துக்களும் உட்பட்ட நிலைமாற்று மாறுபட்டுச் சட்டத்தை ஸமரஸ முறையாகப்பாவித்துக் கொள்ளுகிறது. வஸ்துக்கள் உண்டான வகையை ஸ்தாபிக்க யோசிப்பது பயனற்ற காரியம். மாலுங்கனென்பவன் புத்தரை, வஸ்துக்கள் உண்டான வகையை தனக்கு உணர்த்தும்படி கேட்டபோது அந்த விசாரணைப்பயனற்றதாக எண்ணி புத்தர் ஒன்றும் பேசாமலிருந்ததாக மாலுங்கஸுத்தத்தில் சொல்லி இருக்கிறது. புத்தமதம் வஸ்துக்களை உள்ளபடி எடுத்துக் கொண்டு தற்காலத்தில் வியாபித்திருக்கும், தீமைகளையும், துன்பங்களையும் எப்படி வெல்லலாம், என்பதைக்காட்டுகிறது.

135. வினா. புத்தமதத்தில் ஆன்மா நித்தியவஸ்துவென்று சொல்லுகிறதா?

விடை. ஆத்மா என்பது அவிவேகிகள் தம் தப்பெண்ணத்தை விளக்க இட்ட குறி என்பது அதன் கருத்து ஒவ்வொரு வஸ்துவும் மாறுபட்டே ஆகவேண்டும் என்றால் மனிதனும் ஒரு வஸ்து வாகையால் அவனது ஒவ்வொரு பாகமும் மாறுபடவேண்டும், மாறுபடுவது நித்தியமாயிராது. ஒவ்வொரு வஸ்துவும் மாறுபடுகிறதாகையால் அதில் ஒருபாகமும் நித்தியமாயிருக்கமுடியாது.

136. வினா. மனிதனுக்கு ஆத்மா என்பதொன்றில்லை யானால் மனிதன் தன்னிடம் நித்தியமான வஸ்து இருப்பதாக என்றுவதற்குக் காரணம் என்ன ?

விடை. தன்ஹும் அல்லது இருக்கவேண்டும் என்கிற திரா ஆவல், மனிதன் பெருமையோ, சிறுமையோ பின் அடையும்படி கிருத்யங்கள் செய்திருப்பதாலும் தன்ஹும் உண்டாய் இருப்பதாலும் கர்மத்தின் தொழிலாய் மறுஜனனம் உண்டாகிறது.

137. வினா. ஜனனம் எடுப்பதுயாது ?

விடை. சாவேன்றால் கடைசியாக கொள்ளப்பட்ட ஆசைகளால் உண்டாகும் ஸ்கந்தத்தின் புதுக்கூட்டம்.

138. வினா. எத்தனை ஸ்கந்தங்களிருக்கின்றன ?

விடை. ஐந்து.

139. வினா. ஐந்து ஸ்கந்தத்தின் பெயரென்னே ?

விடை. ரூபம், வேதனை, ஸஞ்ஞை, ஸம்ஸ்காரம், விஞ்ஞானம்.

110. வினா. அவைகளின்னவை என்று சுருக்கமாய் விளக்கும்?

விடை. ரூபம், என்றால் பதார்த்தகுணம். வேதனையென்றால் உணர்ச்சி. ஸன்னை என்றால் அருபகுணம். ஸம்ஸ்காரம் என்றால் மனச்சாயல். வின்ஞனை யென்றால், மனோசக்தி. இவைகளால் நாம் இருக்கிறோம். என்னும் உணர்ச்சி இருக்கிறது. இவைகள் மூலமாய் நாம் உலகத்தோடு பழகுகிறோம்.

141. வினா. ஐந்து ஸ்கந்தங்களின் சேர்க்கை பலவிதப்பட்டு அதனால் ஒருவன் மற்றொருவனினின்றும் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் என்னவென்று சொல்லவேண்டும்?

விடை. அதற்கு முன் ஜனனத்தில் அவன் செய்த கர்மமே என்க.

142. வினா. கர்மத்தால் புதிதாய்ப் பிராணி உண்டாவது எதன் தொழில் அல்லது கர்த்தத்துவத்தால்?

விடை. தன்ஹம் அல்லது வசிக்க வேண்டும் என்கிற எண்ணத்தால்.

143. வினா. மறுஜனன தத்துவம் எதை அஸ்திவாரமாக உடைத்தாயிருக்கிறது?

விடை. ஸர்வ ஸாமானிய இயற்கைச் சட்டத்தில் பூர்ண நியாயமும் நடுநிலைமையும் தகைமையும் அமைந்து கிடக்கின்றன என்னும் உணர்ச்சியைப் புத்தர்கள் ஒருவாழ் நாள் ஒருவனது க்ருத்யத்திற்கியைந்த வெகுமானம், அவமானம் பூர்த்தியாகும் வரையில் வியாபிக்கிறதென்பதை நம்புவதில்லை. மறுஜனனங்கள் அவனது பல வாழ்நாள்களிலும் நன்மை மிஞ்சி யிருந்தால் அதிக விரைவாயும் தீமை

அதிகரித்திருந்தால் கொஞ்சம் மெதுவாயும் சுற்றி வரும்.

144. வினா. முன் ஜனனத்தின் தன்மைத்தால் உண்டானதாயிற்றே. அந்த ஜனனத்தின் பிராணியும் இந்த புது ஸ்கந்தத் தொகுதியாகிய உருவமும் ஒன்றேதானா?

விடை. ஒருவிதத்தில் அது ஒரு புதிய பிராணி, இன்னொருவிதத்தில் அப்படியல்ல. இந்த வாழ்நாளைக்குள் ஸ்கந்தங்கள் அடிக்கடி மாறுகின்றன. சாத்தன் என்ற ஒரு மனிதன் 40, வயதாயினும் 18, வயது வாலிபனாயினும், ஒரே பிராணியாயிருக்காலும் அவன் தேகம் விடாது தேய்ந்து வளருவதாலும், குணம், புத்தி மாறுபடலாலும் வேறு பிராணியே, ஆனாலும் கிழவயதில் அவன் அதற்கு முன் ஒவ்வொரு காலத்திலும் எண்ணின எண்ணங்களுக்கும் செய்த காரியங்களுக்கும் தக்கபடி இன்ப துன்பங்கள் அனுபவிக்கிறான். அப்படியே மறுஜன்னம் எடுக்கிற பிராணி ரூபம் மாறி ஸ்கந்தம் வேறே தொகுதியாய் இருக்கிறதே யொழிய வஸ்து ஒன்றேயாகையால் முன் ஜன்னத்தின் எண்ணங்களுக்கும் காரியங்களுக்கும் ஏற்க அனுபோகமடைகிறது.

115. வினா. ஆனால் தேகத்திலும், மனதிலும் மாறுபட்டாலும் கிழவனுக்கு இளமையில் நடந்த சங்கதிகளெல்லாம் ஞாபகத்திலிருக்கிறதே, அப்படியிருக்க முன் ஜனனத்தின் நடவடிக்கை இந்த ஜனனத்திலேன் ஞாபகமிருக்கிறதில்லை?/

விடை. ஏனென்றால் ஞாபகம் ஸ்கந்தத்திலடங்கியிருக்

இறது. புது ஜனனத்தின் ஏக்கம் வெறி
கையால் அந்த ஜனனத்தின் நடவடிக்கை
களைக் குறிக்கும் ஞாபகமும் புதியதாய் உண்
டாய் பெருகின்றது. ஆயினும் முன் ஜனனத்
தின் விபரங்களெல்லாம் இந்த ஜனனத்தி
லும் தெரிய வேண்டும், எனெனில் ஸித்தார்
த்தனென்னும் ராஜகுமாரன் புத்தனான
காலத்து அவருக்குப் பூர்வஞானம் வந்து முன்
ஜனனங்களின் தொடர்ச்சி எல்லாம் அவரு
க்குத்தெரியவந்தது, அந்த நடவடிக்கைகளெ
ல்லாம் தொடர்ச்சியாக வராத பக்ஷத்தில்
இப்படித்தெரிதல் முடியாது. எனெனில் அப்
போது அறிதற்கு ஒன்றும் இருந்திராது.
தியானத்தையடைந்தவன் இவ்விதமாய் முன்
பிறவிகளெல்லாம், இன்னவை என பின்
முறையாய் அறியலாம்.

146. வினா. இந்த ரூப பேதங்களெல்லாம் கடைசியில்
என்ன விதமாய் முடிகிறது?

விடை. நிர்வாணத்தில் முடிகிறது.

147. வினா. தெய்விக விஷயங்களென்று சாதாரணமாய்
சொல்லப்பட்ட அபூர்வ விஷயங்கள் உண்டா
க்கும் சக்தி மனிதனிடம் மறைந்து கிடக்கிறது,
என்று புத்தமதம் ஒப்புக் கொள்கிறதா?

விடை. ஆம். ஆனால் அவைகள் அஸ்வாபாவமானவை
யல்ல, ஸ்வாபாவமானவைகளே, நம் சுத்த காவி
யங்களில் விதித்திருக்கும் முறைமைப்படி
அவைகளை நாம் விர்த்தி செய்யலாம்.

148. வினா. இந்த சாஸ்திரங்களுக்குப் பெயரென்ன?

விடை. பாலி பாஷையில் இத்திவிதனை என்பர்.

149. வினா. எத்தனை விதங்களிருக்கின்றன?

விடை. இரண்டு. லௌகிகம் அல்லது மந்திரம்.

150. வினா. எப்படிப் பட்டவர்களுக்கு இந்த சக்திகள் விருத்திக்கும்?

விடை. தியானம் என்றும் ஞான ஸாதகங்களால் ஒருவனுக்கு காலாவட்டத்தில் உண்டாய் விருத்தியாகின்றன.

151. வினா. இந்த இத்தி சக்தியானது இழந்துவிடக் கூடியதா?

விடை. லௌகிகம் இழந்துவிடக்கூடியது. லோகோத்ரசக்தி ஒரு தரம் பெறுவோமாகில் அப்புறம் போகாது.

152. வினா. புத்தருக்கு இந்த இரண்டாவது சக்தி இருந்ததா?

விடை. பூர்ணமாக இருந்தது.

153. வினா. புத்தரது ஞானத்தில் என்னென்ன அடங்கி இருந்தது?

விடை. அறியும் வஸ்துக்கள், அறியக்கூடாத வஸ்துக்கள், கூடிய வஸ்துக்கள், கூடாதவைகள் இவைகளின் கூடாமையும் பெருமை சிறுமைக்குக் காரணமும் அறிந்தார். அவர் எந்த பிராணியின் உள்ளெண்ணத்தையும், அறிய வல்லவர், அவர்களுக்குச்சபால முறைகளும் இந்திரிய மயக்கங்களும் ஆசைகளை யடக்கிறோரும் விதமும் தெரியும். அவர் பிராணிகளின் ஜன்மம் மறுஜனனம் இவைகளையும் இன்னும் பலவற்றையும் அறிந்தவர்.

154. வினா. ஒரு தேவன் சித்தார்த்தருக்கு, வெவ்வேறு ரூபமாய் பிரஸன்னமானதாகச் சொன்னீரே?

இப்படி மனிதரோடு பழக்கும் கண்ணுக்குப் புலப்படாத பிராணிகளைப்பற்றி புத்தர்கள் என்ன நம்புகிருர்கள்?

விடை. வெவ்வேறு மண்டலங்களிலும், லோகங்களிலும் அப்படிப்பட்ட பிராணிகளிருப்பதாக அவர்கள் நம்புகிருர்கள் அருகத்து தன் சுய உள்ளப் பயிற்சியாலும், கெட்ட சுபாவங்களை வெல்லலாலும், முதன்மையாயுள்ள தேவனுக்கும், பெரியவனுகிறன். தன் கீழ்ப்பட்டவர்களை தேவரை எல்லாம் ஆளுகிறன் என்பது புத்தஸித்தாந்தம்.

155. விஞ. தேவர்களில் எத்தனை விதம்?

விடை. மூன்றுவிதம். காமவசிரர் (காமங்களினின்று தப்பாதவர்கள்) ரூபவசிரர் (அதற்கும் மேல்பட்டது ரூபமுள்ளவர்கள்) அரூபவசிரர் (தூய்மையில் பூர்ணமடைந்தவர் பதார்த்த ரூப மில்லாதவர்.)

156. விஞ. நாம் அவர்கள் யாருக்காவது பயப்பட வேண்டுமா?

விடை. ஹிருதய சுத்தியும் மனேதிடமும் உள்ளவன் பயப்படவேண்டிய அவசியமில்லை ஒரு கெட்ட தேவனும் அவனை வருத்த முடியாது ஆனல் சில தேவர்கள் அசுத்தவான்களையும் தங்களை வருவிக்கிறவர்களையும் தொந்திரவு செய்வார்கள்.

157. விஞ. புத்தரது தேகம் இறந்ததையும் அவர் நிர்வாணத்தை யடைந்ததையும் பற்றி விபரமாய்ச்சொல்லும்?

விடை. தான் சுயமாய் மேற்கொண்ட தொழிலை முடித்து தத்வத்தை பூரணமாக்கி நிர்வாண,

மார்க்கத்தைப் பலருக்கும் கற்பித்தும் இறப்ப தற்கு ஆயத்தமாயிருந்தார். தான் புத்த தத்வம் அடைந்த 45, ம் ௵ பௌர்ணமியில் சாயங்காலம் காசிக்கு 120, மயிலில் இருந்த குஸி நகரத்துக்கு வந்தார். தன் முடிவு வந்த தென்று அறிந்து இரண்டு சால விருக்ஷங் களுக்கு மத்தியில் கட்டிலை தலைபக்கம் வட புறமாகப்போடச் சொல்லி அன்றிராத்திரி முதற் சாமத்தில் மல்லியராஜ குமாரருக்கு போதித்து 2-வது சாமத்தில் ஒரு பெரிய பிராமணப்பண்டிதர் ஸுபத்திரர் என்ப வரை தன் மதத்தில் சேர்த்து அப்புறம் அங்கே கூடியிருந்த குருக்கள்மாரிடம் தத்துவ த்தைப்பற்றி சம்பாஷித்து விடியற்காலையில் ஸமாதியடைந்தார்.

158. வினா. புத்தர் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் என்ன? யாரிடத்தில் சொன்னார்?

விடை. தன் சிஷ்யரைக் கூப்பிட்டு மனிதனது ஒவ்வொரு பாகமும் சக்தியும் அழிந்து போக வேண்டியதா யிருக்கிறது ஆகையால் சாக்கிரதையாய் உங்கள் ரக்ஷணையை தேடிக்கொள்ளுங்கள் என்றார்,

159. வினா. அவர் ஆயுளில் முக்கிய நாட்கள் என்ன?

விடை. கலியுகம் பிறந்து 2,478 ம் ௵ வைகாசி ௴ வெள்ளிக்கிழமை வைசாக நக்ஷத்திரத்தில் பிறந்தார், 2506 ம் ௵ காட்டிற்குப் போனார். 2513 ம் ௵ புதன்கிழமை விடியற்காலையில் புத்தரானார். 2,558 ம் ௵ வைகாசி ௴ செவ்வாய்க்கிழமை பௌர்ணமியில் 80வது வயதில் பரகதியானார்.

160 வினா. தன் தத்துவத்தை புத்தகத்தில் எழுதி வைத்தரா?

விடை. இல்லை. இந்தியாவில் அப்படிப்பட்ட வழக்க மில்லை. தான்போதித்த 45, வருஷமும் தன் தத்துவத்தை ஒவ்வொரு விஷயத்திலும் வியாயாய் விளக்கி பெருக்கினார், அதைத்தன் சிஷ்யருக்கு உபதேசித்தார். அவர்கள் ஒவ் வொரு வார்த்தையையும் ஞாபகத்தில் வைத் [illegible] ஆனால் எழுதக்கூடா [illegible] இல்லாததால் [illegible] லோராஜன் [illegible] ராக நாதுவிய [illegible] வருகிறது. புத்தர் [illegible] வசந்தகாலத்தில் 500, அரு [illegible] முக்கிய சிஷ்யரில் ஒருவரான மகா காசியபரை சபாநாயகராகக் கொண்டு சபை கூடி வர்க்கத்தார் அநுசரிக்க வேண்டிய முறை களையும், தத்துவங்களையும், ஸ்தாபித்தார்கள்.

161. வினா. இந்த சபை எங்கே கூடிற்று?

விடை. ராஜக்ருகத்துக் கருகில் ஸத்த பர்ணியில் சபையோரெல்லாரும் புத்தரது மொழிகளை ஒருமிக்க உச்சரித்தார்கள்.

162. வினா. மற்ற சபைகள் எப்போது கூடின?

விடை. ஒரு நூற்றாண்டுக் கப்புறம் வைஸாலியல் வாலுகாமகோயிலில் யஸத்திரா சபாநாயக ராக கூடியது. பௌத்தசகாப்தம் 226 ம் ஹூல பாட்ணவில் அசோகாயகோயிலில் அசோக ராஜன் மரபில் மொக்கலி புத்ததிஸ்ஸன் சபா நாயகனாக மூன்றும் சபைகூடிற்று.

163. வினா. அசோகராஜன் யார்?

விடை. மகத தேசாதிபதியும் அக்காலத்தில் ஆசியா கண்டத்தரசரில் மிக்க பலாட்டியனுமானவர். அவர் பட்டத்துக்கு வந்த 20, ம் ௵ புத்த மதத்தில் சேர்ந்து உலகமுழுமையும் புத்த மதத்தை பரப்பமுயன்றார். அவர் ஒரு நல்ல அரசன் அவர் பெயர் எல்லா புத்த தேசங்களிலும் இன்றைக்கும் நேசிக்கப்படுகிறது.

164. வினா. புத்த மதத்திற்காக அவர் என்ன செய்தார்?

விடை. மடங்களும் கோவில்களும் கட்டி, மனிதருக்கும், மிருகங்களுக்கும், தர்மவைத்திய சாலைகளும், தோட்டங்களும் ஏற்படுத்தி புத்தநீதி தத்துவத்தை அனுசரிக்கும்படி தன் பிரஜைகளை ஆக்ஞாபித்தார், பாட்னாசபை, முடிந்ததும் பரதேசங்களுக்கு, [illegible] போதனைகளை போதிக்கும்படி அனுப்பினார். புத்த தத்துவத்தைப்பற்றி சொல்லும்படி 4, கிரேக்க ராஜாக்களுக்கும் தூதரை அனுப்பினார். மதத்தைக் குற்றமற வைக்கும் பொருட்டு தன் தேசத்திலேயே மதோசிய விசாரணை கர்த்தனையும், புத்தமதத்தைப் பெண்களுக்குப் போதிக்கும்படியாக சில போதகர்களையும் ஏற்படுத்தினார்.

165. வினா. இதற்கெல்லாம் என்ன ஸ்தாபனைகள் இருக்கின்றன?

விடை. இப்போது 50, வருஷமாக அசோகன் பாறைகளிலும், கற்றூண்களிலும், எழுதி வைத்த ஆக்ஞாபனைகள். இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் கண்டெடுக்கப் பட்டன. அவைகளெல்லாம் ஸர்க்காரால் இங்கிலீ

ஷில் மொழிபெயர்க்கப்பட்டு இந்தியா கவர்ன்மென்டு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

166. வினா. இந்த ஆஞ்ஞாபனைகளெல்லாம் புத்தமதத்தத்தைப்பற்றி என்ன கருத்து கொள்ளுகின்றன?

விடை. மேன்மையான ஸர்வ மதாபிஷ்டமும், ஸர்வ சகோதரத்வமும், ஸன்மார்க்கமும், நியாயமும் கற்பிக்கும் மதமென்று சொல்லுகின்றன. ஐரோப்பாவிலும், அமேரிக்காவிலும், இப்போது பெரிய பண்டிதர்களால் புத்தமதம் மதிக்கப்படுகிறதற்கு அவைகளே முக்கிய காரணம்.

167. வினா. ஒரு கிறுஸ்து கல்விச்சங்கத்தில் ஒரு புத்தகத்தில் ஒரு ஆங்கிலேய கிரந்தகர்த்தா இந்த ஆஞ்ஞைகளைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறார்?

விடை. ஆஞ்ஞைகளில் ஸ்ரேஷ்டமான ஸன்மார்க்கங்கள் நிறைந்து கிடக்கின்றன, தந்தை, தாய் வணக்கமும், புத்திர மித்ரவாஞ்சையும், ஸர்வ ஜீவகருணையும் தாழ்ந்தோரிடத்தில் அன்பும், மரியாதையும் காமக்ரோத மோக மதமாத்ஸல்யத்தை யடக்குதலும், கருணை, தர்மம், ஸர்வாபிஷ்டம் இவைகளும் இவைபோன்ற புத்திகளும் தேவயனே ஹராஜுக் கிருபா பூரண ராஜன் தன் பிரஜைகளுக்குக் கற்பிக்கிறார் என்று எழுதியிருக்கிறார்.

168. வினா. புத்தமதம் சிலோனில் எப்போது தோன்றியது?

விடை. தேவனாம் பியதிஸ்ஸன் அரசாண்டு கொண்டிருந்தபோது, குருபீடம் பெற்ற அசோக ராஜன் குமாரன் மகிந்தனால் சிலோனில் கொண்டு வரப்பட்டது. சிலோன் ராஜன் மகிந்தனையும் அவனோடு வந்தோரை, குருக்களையும் மரியாதையாய் எதிர்கொண்டு உடனே புத்தனுக்கு அநுராத புரத்தில் அபாராம கோவில் கட்டினான். வர்க்கத்தாரில் சேர்ந்த மகிந்தனுடைய சகோதரியும் சில நாளைக்குப் பின் புத்த கன்னிகைகளோடு சிலோனுக்கு வந்து அநேக சிங்கள பெண்களுக்கு புத்த மத போதனைகளை கற்பித்தார்கள். போதகர் புத்த தத்துவம் அடைந்த புத்தகயாவிலிருந்த போதிவிருக்ஷத்தின், ஒரு கிளையை சங்கமித்தை கொண்டு வந்தாள். அதை அநுராதபுரத்தில் நாட்டி வைத்தார்கள். அந்த விருக்ஷம் இன்னும் இருக்கிறது, அது சரித்திரகாலம் தொடங்கி உலகத்திலுள்ள விருக்ஷங்களெல்லாம் வெகு புராதனமானதென ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

"முற்றிற்று."

—

ஒழிபியல்.

பின் வரும் பதினுன்கு மூலவாக்கியங்களின் விஷய நம்பிக்கை பௌத்தமத பிரிவுகளாகிய உத்தர, தக்ஷிண மிவ்விரண்டிலும் முக்கியமான கோட்பாடுகளென்று சம்மதித்து அதிகாரமுடைமுகமற்றி அங்கங்களின் மூலமுறைப் எனக்கு நேராககிடைத்தன. அவைகள் சரித்திரத்திற்கு அவ்வளவு முக்கியமாயிருப்பதால் இவ்விருவிடை பதிப்பில் ஒழிபியலாக சேர்க்கப்பட்டன. மங்கோலியாவின் சிறந்த பௌத்ததர்மசங்கத்திலுள்ள முக்கிய லாமாக்கள் உபயோகத்தின் பொருட்டு சாதனப்பத்திரத்தை மொழிபெயர்த்து நான் கொடுத்ததில் யாவற்றையும் ஏற்றுக்கொண்டு புத்தர் பிறந்த நாள் நான் கொடுத்த கணக்கிற்குமேல் ஆயிரங்கணக்கான வருஷங்கள் முன்னமே இருப்பதாக நம்புகிறார்களென்று சிறிது காலத்திற்கு முன் கல்வியிற்சிறந்த பிற்தேசமாகிய ருஷியாவின் இளவரசரான ஒக்டோம்ஸ்கி என்பவரால் எனக்கு தெரிவிக்கப்பட்டது. இவ்வதிசயமான உண்மை இதுகாறும் என் அறிவிற்கு எட்டினதில்லை அம்மங்கோலிய சங்கத்தார் உண்மையான காலாரம்பத்தையுடைய சாக்கியமுனியை அவருக்குமுன் மூலவாக்கியத்தில் உறுதிச்சொல்லாகிய ஒருவனே என நினைத்து திகைத்திருக்கலாமா? இது எப்படியிருந்தாலு மிருக்கட்டும். இப்பிரபஞ்ச பௌத்தர் யாவருக்கும் இப்பதினுன்கு சித்தாந்தங்களின் உண்மை பாவியிருப்பது மிக்க பூரிப்பைத்தருகிறது.

எச். எஸ். ஆ.

பௌத்தத்திற்குரிய விசேஷித்த கோட்பாடுகள்.

I. பொறுமை, சாந்தகுணம், யாவர் பேரிலும் வேற்றுமையில்லாமல் சகோதரவாஞ்சை காண்பிக்க வேண்டுமென்று பௌத்தர் போதிக்கப்பட்டிருப்பதோடு; ஜீவாசிக்கூட்டங்களின் பேரில் அளவுபடா அன்பை பாராட்டவேண்டும்.

II. பிரபஞ்சம் வெளிப்பட்டது, சிருஷ்டிக்கவில்லை; இது தருமநூல் கால பிரமாணத்திற்கு தக்கபடி எண்ணங்கொள்ளும் கடவுளாலல்ல,

III. பௌத்தத்திற்குரிய உண்மைகள் இயற்கையாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் ஒளி பொருந்திய பௌத்தர்களால் கற்பாந்தர காலங்களாக அல்லது காலத்திற்குகாலம் போதிக்கப்பட்டதென்று நாங்கள் நம்புகிறோம். புத்தர் என்றால் தெளிந்தவர் என்றருத்தம்,

IV. தற்கால கல்பத்தில் காசிகாவதற ஆசான் சாக்கையமுனி அல்லது கௌதமபுத்தரே. அவர் இராஜகுடும்பத்தில் 2, 500. ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் உதித்தவர். அவர் சரித்திரபூர்வமாய் உயர்ந்தோன் அல்லது புருஷன். அவருடைய பெயர் சித்தார்த்த கௌதமர்.

V. அறியாமை ஆவலையுண்டாக்குகிறது. திருப்தியற்ற ஆவலே மறுபிறப்பிற்கு காரணம். அம்மறுபிறப்பே, துக்கத்திற்கு காரணம். ஆகையால் துக்கத்திலிருந்து விலக மறுபிறப்பிலிருந்து தப்பவிக்கவேண்டும். மறுபிறப்பை ஒழிக்க ஆவலை அழிக்க வேண்டும். ஆவலையழிக்க அறியாமை அழிய வேண்டுமென்று சாக்கையமுனிவரால் போதிக்கப்பட்டது.

VI. மறுபிறப்பு முக்கியம் இருத்தல் வேண்டும் என்ற நம்பிக்கையை அறியாமை ஏற்படுத்துகிறது: அப்படிப்பட்ட பல ஜென்மங்கள் நீக்கப்படுமென்னும்படியான ஓர் முக்கிய ஜீவியத்தை ஏற்றுக்கொள்வது மல்லாமல், அறியாமையழிந்த பிறகு அவ்வகைத்தான ஒவ்வொரு மறுஜென்ம மானது பிரயோஜனமற்றதென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. அறியாமை பொய்யுந் நியாயமற்றதுமான ஒரோகிலமை உண்டென்று பிறப்பிக்கிறதென்றும், அறியாமை இப்பிறவிக்குப்பின் நித்திய சுகம், அல்லது துக்கத்தை பிறப்பிக்கிறதென்று மாயமான எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

VII. இப்பேர்ப்பட்ட அறியாமையை போக்குவதற்கான நிலைமையை அடைவதற்கு, இழிவான சுயவிருப்பங்களை அழிக்கவேண்டும், ஞானமான எண்ணமிருத்தல் வேண்டும். அறிவை விர்த்தி செய்யவேண்டும்.

VIII. ஜீவிக்கவேணுமென்கிற ஆவலே மறுபிறப்பிற்கு காரண மானபடியால் அதை அழித்த பிறகு மறுஜனனம் நிற்கிறது. அதை பூர்த்தி செய்த ஒருவன் நிருவாண மென்னும் ஆனந்தத்தை அடைகிறான்.

IX. அறியாமையை அகற்றுவதற்கும் துக்கத்தை நிவர்த்தி செய்வதற்கும் பின் வருகிற நான்கு மேன்மையான உண்மைகளை அறிந்துகொள்வதினால் தெளியுமென்று சாக்கையமுனிவர் கற்பித்திருக்கிறார். அவையாவன, :—

1. துன்பங்கள் இருப்பதுவுண்மை;

2. துக்கத்தை பலிதமாக்க காரணம், தான் ஒருபோதும் திருப்தியடையாமை. ஒருபோதும் திருப்தியான முடிவை கண்டடையாமை;

3. அந்த ஆவலின் அழிவு அல்லது அதை ஒருவன் விலக்கித்தள்ளுதல்;

4. துக்க ஒழிவை அறிவதற்கான மார்க்கம்: அரிய அஷ்டாங்க மார்க்கமேயாம் அதாவது:—

நற் நம்பிக்கை, நல் எண்ணம், நல் வசனம்,
நற் செய்கை, நல் விர்த்தி, நன் முயற்சி,
நல் நினைவு, நற் சிந்தை.

X. சுவதியானமே ஞான தெளிவுக்கு கொண்டு போகும். அல்லது மனிதருக்குள் மறைந்திருப்பது பௌத்தரைப் போன்ற மனோசித்த உற்பத்தியை காட்டும்.

XI. ததாகதராலே பௌத்த தர்ம சாஸ்திரத்தை விவரித்திருப்பது:
பாவத்திலின்று விலகிபடல், நன்மைக் கடைப்பிடித்தல்,
மனதை சுத்திகரித்தல்.

XII. இயற்கைக் காரணத்துவமான "கர்மத்திற்கு" இப்பிரபஞ்சம் அடங்கியிருக்கிறது. முன் செய்த கருதியாரதோ கருதி பலனாததற்கு பதிலாக இப்போது அதன் பலனைத் தருகிறது. ஒவ்வொருவரும் தாங்கள் இப்போது அநுபவிப்பதைக் கொண்டே அதன் காரண காரியத்தை அறியலாம்.

XIII. சாதாரணமாக அநேக தனம் செய்வதை பௌத்த சன்மார்க்க தருமத்தில் சொல்லியிருக்கும் பின் வரும் விதிகளை தழுவி அநுஷ்டித்தால் விளங்கும் அவ்விதிகளாவன:—

(1) கொலை செய்யாதே; (2) களவு செய்யாதே;
(3) பிறன் மனை இச்சியாதே (4) பொய் சொல்லாதே;
(5) மயக்கத்தைத் தரும் லாகிரிவஸ்துவை உட்கொள்ளாதே.

மற்ற ஐவகைக் கட்டளைகள் குடித்தனக்காரரை விட பதின் மடங்கு விரைவாய் அலையும், பிறப்பையும் அறுப்பவர்கள் பின்பற்றவேண்டியது.

XIV. பௌத்த தருமம் மூடபக்தியுள்ள பேதமையை நீக்குகிலையச் செய்கிறது. கௌதம புத்தர் குழந்தைகளை அதன் பெற்றோர் கல்வியிலும் வித்தையிலும் வளர்க்க வேண்டுமென்று போதித்தார். அதுவுமன்றி எந்த ஓர் சந்நியாசியால் சொன்னதென்றோ அதை நம்பவேண்டாம், எந்த புஸ்தகத்திலோ எழுதியிருப்பதென்று நம்பாதே, பாரம்பரியமாய் வந்ததென்றும் நம்பவேண்டாம். எப்பொழுது நியாயத்திற்கு ஒத்து வருகிறதோ அதை நம்பு என்று போதித்தார்.

எச். எஸ். ஆல்காட், பி. டி. எஸ்.

இதை எல்லா பௌத்தர்களும் அங்கிகரிக்கத்தக்கதாய் பொதுவிடமாகக் குறிப்பிக்கப்பட்டது.

2,434 பௌத்த ஆண்டுக்குச்சரியான 1891 வருஷம் ஜனவரி மீ 8, 9, 10, 11, 12. இந்த தேதிகளில் சென்னை அடையாற்றில் நிறைவேறிய பௌத்த இராச்சிய ஆலோசனைச் சங்க பிரதம ஆசிரியர்கள் அநுமதிக்காக பாபட்சியுடன் தனித்தனியே ஒப்புவிக்கப்பட்டது. இதனை பரிசோதித்தவர்களின் நாமதேயங்கள்.

ஜப்பான். கோஸென் குணரத்ன. சீ. ஜே. தொருஷோவ.
பர்மா. ஊ அலெய்ங் தா அவ்.
சிலோன். தம்மபால சுவாமிதாரு.
சிட்டகாங். மாங்தாபோவு, பிரதிநிதியான சா. கிருஷ்ண சந்திர சௌதிரி.

பர்மா.

தேசத்து பௌத்தர்கள் ஆதரவால் ஒப்புக்கொண்டவர்களின் நாமதேயங்கள்:

தா-தா-ன-பெய்ங் சையாதா ஊஜீ; சயிமான் சையா தா ஊ அங் சைட்;
வாடே சையா தா ஊ மீ கா; சாயா சையா தா ஊ பா—;
அதிவின் சையா தா; யாடக் சையா தா ஊ சை;
டோ சையாதா ஊ ஆ லா;
மற்றும் பதினைந்து பெயர்கள்.

2,434, பௌத்த ஆண்டுக்குச்சரியான 1891 வருஷம் பெப்ரவரி மீ 25வ சிலோன் தேசத்து பௌத்தர்கள் ஆதரவால் ஒப்புக்கொண்டவர்களின் நாமதேயங்கள்;

கண்டி மால்வட்ட ஆசிரம பிரதம ஆசிரியர், இப்போலா.
கண்டி, அஸ்கிரி ஆசிரம பிரதம ஆசிரியர், யதாவதி.
கொளம்பு மாகாணம், ஆம்பாற்பறை பிரதம ஆசிரியர் எச். சுமங்கலா.
கண்டி, சித்திரை புத்தக சாலை தலைவரும், தந்தவிஹாரைய ஆசிரியருமான, எவ். சொனுதாரு.
சுக்தா சாஸனதயா விஸ்யாச்சாரியா, தம்மலாங்கா பிதான நாயகா ஸ்தெவிரு, தாமலங்காரு.
மாவாரா நிருத்திகாச்சாரியா மஹாவிபாவிசபுதி வாஸ்கடுவா, ஸுபூதி.

ஜப்பான்

உத்தரபாக பௌத்தர்கள் உள்பட அங்கிகரித்தவர்களின் பெயரும்; பிரிவும்.

சாகு கின்யு ... ... (ஸென் கான் ஸை பிரிவு)
புசட கிரி டா ... ... (நிசரன் ,,)

[illegible] ... ... ([illegible] ,,)
[illegible] ... ... (,, ,,)
[illegible] அக்யா ... ... ([illegible] ,,)
கோ[illegible] போஸின் ... ... ([illegible] ,,)
[illegible] ... ... ([illegible]யான் ,,)
அநகாரிக் [illegible] ... ... ([illegible]தாய் ,,)
[illegible] ... ... (ஷிப் ஆன் [illegible] ,,)

வங்காளம்

ஆப்பம் செட்டகாங், பௌத்தர்களுக்காக ஒப்புக்கொண்டவர் [illegible] நகவா பார்வதா விஹாரிபதி குணமிரு விளிலங்காரு.

நாலு சாஸ்திரத்திரட்டு.

மேலெழுதியிருக்கும் பின்வரும் கிரந்தங்களின் ஆதாரவாலும் இவ்விஷயம் திரட்டப்பட்டது.

நூலாசிரியர்கள்.	நூற்பெயர்.
ராகீது இல்[illegible] ...	விநய வசனங்கள்.
பீல்	சீனதேச பௌத்தக்கிரந்தம்,
[illegible]	பௌத்த இலக்கிய நூல்,
[illegible]	பௌத்த [illegible] வலைகள்,
பியூல்பால் [illegible]	பௌத்த [illegible] இதிகாசங்கள்.
[illegible]	தௌத்த வாசகம்,
[illegible]	சீனாவில் பௌத்த தருமம்.
[illegible]	தம்மபதம், [illegible]
[illegible]	பௌத்த தருமமும் ஆதி போதனையும்.
ஸ்ரீ குமாரஸ்வாமி	சுத்தநிபாதா.
பிறையர்	[illegible]த்திரு.
[illegible]	ஜாதகா.
[illegible]	பௌத்த தருமம்,
பியூல்பால், மாக்ஸ் முல்லர் ...	தருமபாதா.
பீல்	பௌத்த சரித்திரம்.
ராக்பில்	உடானவர்கா.
நான்ஜியா	பன்னிரண்டு ஜப்பானிய வகுப்புகள்.
பால் கேரஸ்	பௌத்த சுவிசேஷம்
[illegible]	தருமம்.
[illegible]	பூர்வ இந்தியா.
மாக்ஸ் முல்லர் ...	கிழக்குத்திசை தெய்வீக புத்தகங்களின் தொடர்ச்சிகள்

பிரித்தானிய கலைஞானகராதி.

இஃது:— சென்னை சாக்கைய பௌத்த வாலிப சங்க காரியதரிசி ம. இ. மூர்த்தி அவர்களால் மொழிபெயர்ப்பு செய்து பௌத்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

THE
BUDDHIST PRESS
MADRAS.